உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

கூரியர்

பிப்ரவரி 1971 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1.00

பண்பாட்டுக் கொள்கை—இக்காலப் புதிர்

Photo © Alfredo Testoni - Matto Collection

கற்காலப் படையல் சிலை

உருகுவேயிலுள்ள மாண்டிவிடியோவில் கொலம்பிய நாகரிகத்திற்கு முற்பட்ட பொருள்கள் நிறைந்த பொருட்காட்சி மனை ஒன்று உள்ளது. அதில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கலைப் பொருள்கள் மலிந்துள்ளன. தென் அமெரிக்காவின் பல பகுதிகளிலுமிருந்து திரட்டப்பெற்ற இவை ஸ்பானிய படையெடுப்புக்கு முன் அங்கு நிலவிய இந்திய நாகரிகத்தின் சிறப்பைக் காட்டுகின்றன. இச்சிறு மண்சிலை (10 செ. மீ; 4 அங்) போன்றவை மிகத் தொன்மையானவை. வடகிழக்கு அர்ஜென்டினாவில் கண்டெடுக்கப் பெற்ற இச்சிலை, மட்பாண்டக் கலையை அறிந்திருந்த கற்கால உழவர்கள் வணங்கிய செழுமைத் தெய்வத்திற்கு படையலாக அர்ப்பணிக்கப்பட்டிருக்கலாம்.

உலகக்
கலைக்
கருவூலங்கள்

51 உருகுவே

கூரியர்

பிப்ரவரி 1971

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினுல் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினுல்
பதின்மூன்று பதிப்புகளாக
வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம்	ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு	இத்தாலியன்
ஸ்பானிஷ்	ஹிந்தி
ரஷ்யன்	தமிழ்
ஜெர்மன்	ஹீப்ரு
அராபிக்	பெர்சியன

அமெரிக்க ஐக்கிய நாடு

விற்பனை, விநியோக அலுவலகம் :
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.

ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப் படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம் :
யுனெஸ்கோ, பிளேஸ் தஃபாண்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர் : ஸாண்டி காஃப்ளர்

உதவிப் பிரதம ஆசிரியர் : ரெனி காலோஸ்

பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :
லூஸியோ அட்டினெல்லி

நிர்வாக ஆசிரியர்கள் :
ஆங்கிலப் பதிப்பு : ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு : ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு : அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு : விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு : ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு : அப்தல் மோனியம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு : ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு : மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு : கர்த்தார் சிங் துக்கல் [டில்லி]
ஹீப்ரு : அலெக்ஸாண்டர் பெலி [ஜெருசலம்]
பெர்சியப் பதிப்பு : ஃபெரெதூன் ஆர்தலன் [டெஹ்ரான்]
தமிழ்ப் பதிப்பு : நெ. து. சுந்தரவடிவேலு [சென்னை]
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள் :
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா

ஆராய்ச்சி : ஓல்கா ரோடல்

அமைப்பு, சித்திரம் : ராபர்ட் ஜாகுமின்

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

FEBRUARY 1971 No. 43

No 1-1971 MC 70-2-262 A

பக்கங்கள்

5	1. பண்பாட்டுக் கொள்கை — இக்காலப் புதிர்
13	2. மாறும் வாழ்க்கை முறைகளும் பண்பாட்டு ஒருமைப் போராட்டமும்
15	3. செய்தித் தொடர்புக் கருவிகளும் பொதுமக்கள் பண்பாடும் — ஃபிராங்க் மெக்டெர்மாட்
18	ஓ! ஜோனு, அவர் திமிங்கிலத்தின் மேல் வாழ்ந்தார்
21	பண்பாட்டின் பல்வேறு கூறுகள் — வெனிஸில் யுனெஸ்கோ நடத்திய பண்பாட்டுக் கொள்கை பற்றிய மாநாட்டில் பண்பாட்டுத்துறை அமைச்சர்களும் பிற அறிஞர்களும் அளித்த கருத்துக்கள்.
25	ஆஃப்ரிக்காவின் சுதந்திரமும் பண்பாட்டு விடுதலையும் — ஜேம்ஸ் என்கூசி
26	பேச்சின் பெருமை
2	உலகக் கலைக் களஞ்சியம் — கற்கால படையல் சிலை (உருகுவே)

அட்டைப்படம்

இவ்விதழ் பண்பாட்டுக் கொள்கையும் பண்பாட்டு வளர்ச்சியும் நாட்டு, பன்னுட்டு உறவுகளில் புதியதோர் இடம் பெற்று வருவதை விளக்குகிறது. சென்ற ஆண்டு ஒசாகாவில் நிகழ்ந்த எக்ஸ்போ — 70இலிருந்த இளைஞர் கோபுரத்தின் ஒரு பகுதி இதை அட்டையில் சித்திரிக்கிறது. 23 மீட்டர் உயரமுள்ள இக்கோபுரம் பொருட்காட்சியின் சிறப்பியல்பாக மிளிர்ந்தது. இதுவும் கதிரவன், தாய்மைக் கோபுரங்களும் நட்புறவுச் சதுக்கத்தில் உயர்ந்து விளங்கின.

Photo © Paul Almasy, Paris

வெனிஸில் புகழ்மிகு புனித மாற்கு சதுக்கத்திலிருந்து கடல் நோக்கிச் செல்லும் புனித மாற்குவெளி. இடப்புறம்: பண்டைய கோமான் மாளிகையின் முகப்பு. யுனெஸ்கோ வெனிஸின் பண்பாட்டுச் சிறப்பை எண்ணி சென்ற ஆண்டு கூட்டிய பண்பாட்டுக் கொள்கை பற்றிய முதல் உலக மாநாட்டை அந்நகரில் கூட்டியது. வெனிஸ் கடற்கழியினுள் அமிழ்ந்து வருகின்றது. அதனை அழிவினின்றும் காக்க அண்மையில் யுனெஸ்கோ அனைத்துலக முயற்சி யொன்றைத் தொடங்கியது.

பண்பாட்டுக் கொள்கை —இக்காலப் புதிர்

வெனிஸில் கூடிய இணையற்ற யுனெஸ்கோ மாநாட்டில், குடியேற்ற நாட்டு நிலை மறைந்துவிட்ட இன்றைய உலகின் பண்பாட்டுக் கொள்கை பற்றிய சிக்கல்களை 88 நாடுகள் ஆய்கின்றன

ஃபிராங்க் மெக்டெர்மாட்

1.



Photo © Fulvio Roiter, Venice

வெனிஸ் குடியரசின் வரலாற்றில் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளைக் கண்டு பதட்டமடையாமல், பல நூற்றாண்டுகளாக நான்கு வெண்கலக் குதிரைகள் அமைதியாகத் தோற்றமளித்து வந்துள்ளன. ஆனால் சென்ற ஆண்டு ஆகஸ்ட் 24ஆம் தேதி, கலாச்சாரக் கொள்கைகளின் நிர்வாக, நிறுவன, நிதி, இயல்புகள் பற்றி ஆராயக் கூட்டப்பட்ட பல்வேறு நாட்டு அரசுகள் கலந்து கொண்ட மாநாட்டிற்கு வந்த பிரதிநிதிகளைக் கண்டு, அந்தக் குதிரைகள் மலைத்துத் திகைப்பில் ஆழ்ந்திருந்தால், அதுபற்றி நாம் வியப்படைந்திருக்க முடியாது.

கிரேக்க கலைஞர் ஒருவரின் கற்பனைத் திறனின் கனிந்த படைப்புகளான அக்குதிரைகளை முதலில் நீரோ, பிறகு டிராஜன், கான்ஸ்டன்டைன், வெனிஸ் நகரக் குடியரசுத்தலைவர் டோஜ், நெப்போலியன் ஆகியோர் தம் வசப்படுத்தித் தம் இராணுவச் சிறப்புக்களின் சின்னங்களாகப் பயன்படுத்தினர். கற்பனை வளம் படைத்த அக்கலைஞரின் குறிக்கோளையும், அக் கலைப்படைப்பின் உட்பொருளையும், தம் முன்னோர்கள் உணர்ந்ததைக் காட்டிலும் இன்றைய குடிமக்கள் தெளிவாக உணர்ந்து பாராட்டுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா?

ஃப்ராங்க் சி. மெக்டெர்மாட் செஞ்சிலுவை பன்னாட்டுக் குழுவிலும், ஐ. நா. விலும், அதன் தனிச் செயல் நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார். 1963இல் யுனெஸ்கோவில் சேர்ந்த இவர் முதலில் மொழி பெயர்ப்பாளராகவும், 1969லிருந்து சமூகவியல் துறை, மனிதப் பணிகள், பண்பாட்டுத் துறை ஆகியவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

பண்பாட்டு உரிமையிலிருந்து அரசாங்கங்களின் கடமைகள் வரை

ஒவ்வோர் ஊழியிலும் சிறந்த கலைப்பொருள்கள் மனித அனுபவத்தின் வரலாறாகவும் பிழிவாக வும் திகழ்கின்றன. பெரும் நாஹுவா (ஆஸ்டெக்) பஞ்சாங்கத்தை (கீழே) மெக் ஸிக்கோ நகரிலுள்ள தேசியப் பொருட்காட்சி மனையில் இளைஞர்கள் பார்வையிடுகின்றனர். பண்டைய அமெரிக்கரின் காலக் கணிப்பும் வானவியலும் நுண்மையாகச் செதுக்கப்பட் டுள்ள இக்கல்லில் கலையும் அறிவியலும் ஒருங் கிணைந்துள்ளன. இதற்கு முற்றிலும் மாறான, ஆனால் இதைப் போல் காலத்தை உணர்த்தும் ''பிராட்வே ஆரவார இசை'' எனும் ஓவியம். இதைத் தீட்டிய பியட் மாண்ட்ரியன் எனும் டச்சு ஓவியர் தற்கால ஓவியத்தின், கருத்திய லான வடிவியல் முறையின் முன்னோடியாவார்

ஆயினும், கலாச்சாரக் கொள்கைகள் பற்றி இந்த முதல் அனைத்து நாட்டு மாநாடு நடந்த பின், கலாச்சாரத்தில் நம்பிக்கை கொள்ளாதவர்க்கும் சரி, கலாச்சாரக் கழுகுகளுக்கும் சரி, சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது.

39 அமைச்சர்கள் உள்பட, ஏறத்தாழ 90 நாடுகளின் பிரதிநிதிகள், வெனிஸ் நகரத்தின் சிறப்பு மிக்கப் பின்னணி யினால் உந்தப் பெற்று, ''சமூகத்தின் கலாச்சார வாழ்வில் சுதந்திரமாகப் பங்கு கொள்ளவும், கலைகளைத் துய்க்க வும், அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் பலன்களிலும் பங்கு கொள்ள வும், ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமை உண்டு'' என்ற கோட்பாட்டினை வெளிப்படையாகவும், தடையோ தயக்கமோ இல்லாமலும் ஏற்றுக் கொண் டனர். மனித அடிப்படை உரிமை பற்றிய அனைத்துலகச் சாசனத்திலிருந்து இப்பகுதியை, அன்றாட வாழ்வில் நிலை நிறுத்தி மெய்ப்பிக்கத் தாங்கள் உறுதி கொண்டிருப்பதையும் அவர்கள் தெளி வாக வலியுறுத்தினர்.

இக் குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள் பற்றிக் கருத்து வேறுபாடு கள் இருந்தன என்பது அம் மாநாட் டின் நடவடிக்கைகளிலிருந்து தெளிவா யிற்று. ஆனால் இக் கருத்து வேறுபாடு கள் பொதுக் குறிக்கோளில் கொண்டி ருந்த உறுதியைக் குலைக்கவுமில்லை; பயனற்ற எதிர்மறையான போக்கில் மாநாட்டை அழைத்துச் செல்லவுமில்லை. அதற்கு மாறாக, உருவான நடவடிக்கை கள் எடுப்பதற்கு உறுதியான அடித் தளத்தை அவை அமைத்துத் தந்தன.

ஒவ்வொரு நாடும் கலாச்சாரக் கொள்கை ஒன்றை வகுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படைக் கோட் பாட்டை மாநாடு பொதுவாக ஏற்றுக் கொண்டது. ''மனிதனின் அடிப்படை உரிமையின் காரணமாக, சமுதாயத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்திலும் கலாச் சார நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டால், அவ்வாறு அவன் பங்கு கொள்வதற்குத் தங்கள் வசதிகளுக்கு உட்பட்டு, வாய்ப்பு ஏற்படுத்தி தருவது, சமூக வாழ் வில் பொறுப்பேற்றுள்ள அதிகார அமைப்பின் கடமையாகும் என்பது தெளிவாகிறது'' என்பதை யுனெஸ் கோவின் தலைமை இயக்குநர் ரெனே மேகு வன்மையாக வலியுறுத்தினார்.

பல நாடுகள் ஏற்கெனவே தெளிவான கலாச்சாரக் கொள்கைகளை வகுத்த துடன், அவற்றைச் செயல்படுத்துவதற் கான அமைப்புகளையும் உருவாக்கியுள் ளன. சில நாடுகளில் கலாச்சாரத்துறை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



Photo Rune Hassner - Tiophoto, Stockholm © G. Bern, Paris



Photo © Richard Frieman, Paris

வேறு சில நாடுகளில், கலாச்சாரக் கொள்கையைச் செயல்படுத்தும் பொறுப்பு, அதைச் சார்ந்த மற்ற பொறுப்புகளுடன், குறிப்பிட்ட அரசாங்கத் துறைகள் சிலவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன,

கலாச்சாரத் துறையில் அரசு நேரடியாகத் தலையிடுவதனால் விளையக் கூடிய நன்மைகளை விட, அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாடு காரணமாகச் சுதந்திரக் கலையுணர்வு வளர்ச்சிக்குத் தடை ஏற்படக் கூடுமென்ற ஆபத்து ஓங்குமென்ற கருத்து, சில நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கலாச்சாரக் கொள்கை ஒன்றை வகுப்பதை இந் நாடுகள் நிராகரித்து விட்டன் என்று பொருளில்லை. அதற்கு மாருக, அரசாங்க அமைப்புகளில் சாராத தனியார் நிறுவனங்களுக்கும் தனியாருக்கும், கலாச்சார துறையில் தலைமை ஏற்க, ஊக்கமளிக்கும் கொள்கையை இந்நாடுகள் திட்டவட்டமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆகவே அரசாங்கத் தலையீடு எந்த அளவோடு, எந்த வரம்புக்கு, அமைய வேண்டுமென்பதுதான் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக அமைந்தது.

மொராக்கோ நாட்டுக் கலாச்சார அமைச்சர், எம். எல். ஃபாஸி, அரசாங்கத் தலையீடு பற்றித் தம் நாடு கொண்டுள்ள கொள்கையை விளக்கும் வகையில், 1969இல் இரண்டாம் ஹாஸன் அரசர் நிகழ்த்திய உரையிலிருந்து ஒரு மேற்கோளை எடுத்துக் காட்டினர்: ‘‘முன்பு சிதறிக் கிடந்த பல நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி, ஒருமுகப் படுத்த நாம் விரும்புகின்றோம். ஆகவே அப் பொறுப்பை ஏற்கவும், இந்தக் கலாச்சார அறிவு எவ்வளவு மகத்தானது என்பதையும், அதை ஓயாது புதுப்பித்து வளமாக்க வேண்டும் என்பதையும், இந்த அறிவு, நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தில் சிறப்பான அம்சம் என்பதையும், மக்களுக்கு உணர்த்தவும், நாம் ஒரு துறை அமைக்க விரும்புகிறோம்.’’

ஒரு நாட்டின் மற்ற எல்லா நடவடிக்கைகளுடனும் இணைந்து, பிரிக்க முடியாமல் பின்னி இருப்பது கலாச்சாரம் என்பதை சோவியத் கலாச்சார அமைச்சரான மதாம் ஏகடீரினு பர்ட்ஸேவா, எடுத்துக் காட்டினர். ‘‘ஒரு நாட்டின் கலாச்சார வளர்ச்சி, சமூகத்தின் சமூக பொருளாதார அடிப்படையையும், குடிமக்களின் பொருளாதார உயர்வையும் பொறுத்தது. அதே சமயத்தில், சமூக, ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பாமர மக்களின் கலாச்சார வளர்ச்சி இன்றியமையாதது.’’

இக்கோட்பாடுதான், 1917ஆம் ஆண்டுப் புரட்சிக்குப்பின் சோவியத் கலாசாரக் கொள்கையின் அடிப்படையாய் அமைந்துள்ளது. புரட்சிக்கு முன், மக்களில் முக்கால் வாசிப்பேர் கல்வியறிவு பெருதவர்களாய் இருந்தார்கள். நாட்டின் மூலையில் இருந்த தூரப்பகுதிகளில் வசித்து வந்த நாற்பதுக்கு மேற்பட்ட தேசிய இனத் தொகுதிகளுக்கு, எழுது மொழி ஒன்று கூட கிடையாத நிலை இருந்தது. கலை, கலாச்சார வளர்ச்சியின், நிர்வாக, நிதி, பொருள் வசதிகளுக்கான பொறுப்பைத் தொடக்கத்திலிருந்தே அரசு மேற்கொண்டது.

நீண்டகால நோக்குடன் திட்டமிடுவது இன்றியமையாததாயிற்று. ‘‘15, 20, ஆண்டுகளில் அல்ல, 10 ஆண்டுகளில் கூட, வாழ்க்கை எவ்வளவு பெரிய மாறுதல் அடைந்திருக்கக் கூடுமென்று எண்ணிப் பார்த்தாலே, நீண்டகால அடிப்படையில் திட்டமிடுவதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக உணர முடியும்’’ என்று பர்ட்ஸேவா கூறினர்.

கலாச்சாரத் துறையில் அதிகாரம், செல்வாக்கு, அனைத்தும் ‘ஒரு சில அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர், கலைஞர், யூனியன் அதிபர்கள் ஆகியோர்

Photo Rune Hassner-Tiophoto, Stockholm © G. Bern, Paris

Photo © Paul Almasy, Paris

கற்பனைச் சூறுவளி

சென்ற ஆண்டு ஓசாகாவில் நிகழ்ந்த ஜப்பானிய எக்ஸ்போ 70இல் 'மனித முன்னேற்றமும் நட்புறவும்' எனும் கருத்தை விளக்கிய 90 காட்சியரங்குகளில் சிறந்த படைப்புகளும் கலை, பண்பாட்டுப் பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன. அங்கு பல்வேறு நாடுகளின் பண்பாட்டு வளர்ச்சியைக் காட்டிய காட்சிகள் பலவற்றை இவ்விதழில் காணலாம். மேலே செக்கோஸ்லவாகிய காட்சியரங்கிலிருந்த 'முகில்' எனும் உருக்கி ஊதப்பெற்ற கண்ணாடி எழிலுருவம். ரெனே ரூபிசெக் எனும் செக் கலைஞர் செய்த இப்பொருள், காட்சியரங்கின் கவர்ச்சிமிகு பொருளாகத் திகழ்ந்தது. எதிர்ப்புறமுள்ள படத்தில் காணப்படும் உலோகக் கம்பிகள், மணிகள், இறகுகள் போன்றவற்றைச் செய்த ஓவியர் யாரெனத் தெரியவில்லை. இவ்வுடை ட்ரினிடாட், டொபாகோலின் தலைநகர்களில் களியாட்ட ஊர்வலங்களில் அணியப் பெற்றது.



Photo Bruno Suter © Editions Hermann, Paris
From "Osaka" by B. Suter and Peter Knapp

ஒன்றரை இன்பக் காட்சி

கைவினைஞரின் மரபான திறமைகள் மனித உள்ளம் பொருளை மாற்றும் ஆற்றலைக் காட்டுகின்றன. வலப்புறம்: மரபான அமெரிக்க காற்ருடிகள் காற்றின் திசையில் மட்டுமல்லாமல் கலைப் பண்புகளிலும் முறைகளிலும் ஏற்படும் மாற்றங்களையும் காட்டுகின்றன. இடப்புறம்: வட ரஷ்யாவில் கார்க்கி மாவட்ட மக்கள் கையினுல் செய்யும் புகழ்மிகு ‘மாட்ரிபோஷ்கா’ பொம்மை. கீழே வலப்புறம்: ஜப்பானிய மட்பாண்டக் கைவினைஞன் அரைப் பூனை, அரை ஞாயிறு, அரைச் சிப்பி ஆகிய ஒன்றரை இன்பக் காட்சியமைந்த எழிலுருவைச் செய்துள்ளான்.



கையில் சிக்கிக் குவியச் செய்வதன் ஆபத்தை, நார்வே நாட்டுப் பிரதிநிதியாக வந்திருந்த கல்வி அமைச்சர், க்ஜெல் போன்டெவிக் எடுத்துக் காட்டினுர். ‘‘நிதி கொடுப்பவர் தான் நெறியும் வகுக்கின்றவர்’’ என்பதை அவர் மாநாட்டுக்கு நினைப்பூட்டினுர்

இது, மாநாட்டுப் பிரதிநிதிகள் பலருக்குக் கவலையூட்டுவதாய் இருந்தது. கலாச்சாரக் கொள்கைக்கு. நிதானமும் நடுநிலையும் இன்றியமையாதவை. ஆனுல் அடிப்படையில், கலைஞரின் தனியுரிமையில் குறுக்கிடாமல், அதை வளமாக்கும் முறையில் தான், கலாச்சார கொள்கை அமைய வேண்டும்.

படைப்பாற்றலை வழங்கவோ, தடைசெய்யவோ, சட்டத்தால் முடியாது. ஆனுல் ஒரு கலைஞன் தங்கு தடையின்றித் தன் ஆற்றலை வெளிப்படுத்தவும், பல்வேறு இயல்புகள் கொண்ட தன் ஆளுமையை முழுதும் வெளிப்படுத்தி வளர்க்கவும் அனுமதிக்கும் சமுதாய, சட்டபூர்வமான சூழ்நிலைகளை ஓர் அரசு அமைத்துத் தர இயலும்’’ என்று யுகோஸ்லாவிய நாட்டுக் கலாச்சார அமைச்சர், வி. மிக்குனேவிக் எடுத்துக் காட்டினுர்.

‘‘போருக்குப்பிந்திய காலத்தில், முதல் சில ஆண்டுககளில் நடந்தது போல், கலாச்சார விவகாரங்களில் அரசு தலையிடுவதால், கலாச்சார வளர்ச்சி முடங்கியதுடன், ஆக்கபூர்வமான திறனுய்வு பலவீனம் அடைந்தது’’ என்று மிக்குனேவிக் வெளிப்படையாக ஒத்துக் கொண்டார்.

கலைஞனின் சமுதாய, சட்டபூர்வமான பாதுகாப்பு நிலையை உறுதிப்படுத்துவதுடன், கலை, கலாச்சார நிறுவனங்கள் இயங்குவதற்குச் சுதந்திரம் அளிக்கும் பொருள்நிலை வசதிகளைச் செய்து தருவதும், கலையின் அவசியத்தை நிலைநிறுத்தி, கலையின் தேவைகளை நிறைவேற்றுவதும், கலாச்சார கொள்கையின் தலையாய பொறுப்புக்களாய் அமைய வேண்டும். யுகோஸ்லேவியாவின் அரசியல் சட்டம், கலைஞர், அறிவியல் வல்லுநர் ஆகியோர் சுதந்திரத்தையும் சுயஉரிமையையும் நிலைநாட்டுகிறது; கலாச்சாரமாக எது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று நிர்ணயிப்பதில், அதிகார வர்க்கத்தினருக்கு உள்ள உரிமையைக் கட்டுப்படுத்துகிறது; கலைஞரின் படைப்புகள் கலைச் சிறப்பு கொண்டவையா, அல்லவா, என்பது பற்றி எதேச்சாதிகாரத் தீர்ப்புகளை அரசு வெளியிடுவதற்கு இடம் தருவதில்லை,

‘‘மற்ற நாடுகளில் நடந்து வருவதற்கு மாருக, யுகோஸ்லேவியாவில், கலாச்சாரத்துறையில், அரசின், அரசாங்க அமைப்புகளின், செல்வாக்கு படிப்படியாகக் குறைந்துவரும் நிலை உருவாகியுள்ளது பொதுவான மேற்பார்வை மட்டுமே அரசின் பொறுப்பு என்ற நிலை மேலும் மேலும் பெருகக்கூடும். ஜனநாயகத்தின் உண்மையான உட்பொருளுக்கு இணங்க முடிவுகள் செய்யும் அதிகாரம், நியாயமாக இருக்க வேண்டியது போலவே, அப்பணியில் ஈடுபட்டுள்ளோரிடமும், அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளிடமும் தான் ஒப்படைக்கப்படும். பல்வேறு துறைகளில் கலைத்தோற்றங்களைப் படைப்பவர்களும் யாருக்காகக் கலை படைக்கப்படுகிறதோ அவர்களும் தான், இந்த முடிவுகளைச் செய்வார்கள்,’’ என்று மிக்குனேவிக் கூறினுர்.





Photos Bruno Suter © Editions Hermann, Paris

முன்னேற்றத்தின் முட்டை வடிவப் புதுமைகள்

எக்ஸ்போ-70-க்குச் செல்பவர்கள் ஒளிபுகும், ஆனால் ஒலிபுகாத முட்டை வடிவ பிளாஸ்டிக் அறைகளில் விசைக்குமிழ்களமைந்த வட்டுள்ள வானொலித் தொலைபேசி மூலம் நண்பர்களுடன் பேசுகின்றனர். புதிய தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளும் புதிய பொருள்களும் தற்கால உலகின் பண்பாட்டுடன் நாளடைவில் இணைந்துவிடும் புதிய அமைப்புகளையும் வடிவங்களையும் தோற்றுவிக்கின்றன.





2. மாறும் வாழ்க்கை முறைகளும் பண்பாட்டு ஒருமைப் போராட்டமும்



Photos © Paul Almasy, Paris

சமூகத்தின் எதிர்காலத்திற்குக் கலைகளும் கலை இயல்களும் எவ்வளவு முக்கியமானவை என்பதைத் தேசியப் பொது அடிப்படையில் உணர்ந்து ஏற்றுக்கொள்ள அரசுகள் அண்மையில் மேற்கொண்டுள்ள முயற்சிகளை, அமெரிக்கக் கலைத்துறை தேசியக் குழுவின் தலைவரான மிஸ் நான்ஸி ஹாங்க்ஸ் நினைவு படுத்தினார். அமெரிக்காவில், கலாச்சாரப்பொறுப்புக்கள் தனியார் ஆட்சிக்கு உட்பட்டவை என்று கருதுவதே தேசிய மரபாக அமைந்துள்ளது. ''கல்வி நீங்கலாக, மற்ற கலாச்சார நடவடிக்கைகளுக்காக அரசு செலவிடும் தொகை, சுகாதாரம், நலவுரிமைத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சி, அறிவியல் ஆகியவற்றிற்கு அரசு செலவிடும் தொகையுடன் ஒப்பிடப்பட்டால், மிகக் குறைவாகவே எப்பொழுதும் இருக்குமென்று தோன்றுகிறது. ஆனால் அரசு கலாச்சாரத்துறைக்கும் பொறுப்பேற்று, நிதிச் செலவை மேற் கொள்ள வேண்டுமென்ற அடிப்படை இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது'' என்று அவர் கூறினார்.

கலாச்சாரம் என்ற கோட்பாட்டிற்கு எந்த அடிப்படையில் இலக்கணம் வகுத்தாலும், கலாச்சாரம் என்பது தனியொருவர் எவருடைய சொந்தச்சொத்து அல்ல என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள நீண்டகாலம் ஆகியுள்ளது என்பதையும், மனிதனின் கண்ணியத்திற்கும் சிறப்புக்கும் அதுஇன்றியமையாதது என்று ஏற்றுக் கொள்ளப் பட்டால், அதற்குத் தடைகளாய் உள்ளவை அனைத்தும் நீக்கப்பட வேண்டும் என்பதையும், மாநாடு நடந்து சிறிது காலத்திற்குள் மரணமடைந்த, பிரெஞ்சு நாட்டுக் கலாச்சார அமைச்சர் எட்பண்ட் மிஷெலெட் எடுத்துக் காட்டினார். ''ஆனால் கோடிக்கணக்கான மக்களுக்குரிய இப்பிரச்சினைகளுக்கு, தனி மனிதர்களோ, தனியார் குழுக்களோ, அவை எவ்வளவு செல்வாக்கு பெற்றிருந்த போதிலும், தீர்வு காண்பது என்பது இயலாததொன்று'' என்று அவர் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கக் கலாச்சாரக் கொள்கைகளின் முக்கியத்துவத்தை மாநாடு ஏற்றுக் கொண்ட போதிலும், எந்த அளவுக்கு அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலும், அதற்குத் தேவையான அதிகார அமைப்புகளும் முறைகளும் எவை என்பதிலும், மாநாட்டில் ஒருமித்த கருத்து நிலவவில்லை. ''நேரடியாக அரசு எந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது, அந்தந்த நாட்டின் பொருளாதார, தொழில் நுட்பத்துறை வளர்ச்சியையும் பொறுத்தது. எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய, ஒரே சீரான அமைப்பு ஒன்றைப் பரிந்துரைப்பது இயலாதது'' என்று மாநாட்டின் இறுதி அறிக்கை எடுத்துக் காட்டியது.

தத்துவத்தின் உரைகல்லைத் தேடிய, ரசவாதிகளைப் போல, கலாச்சாரம் என்பதற்கு இலக்கணம் வகுக்கப் பிரதிநிதிகள் பலரும், துணிவான, திறமையான, முயற்சிகள் செய்தனர். வேறுசிலர் அப்பிரச்சினையை எதிர்நோக்காமல் சுற்றி வளைத்துப் பேசினர். ''எங்கள் நாட்டில், கலாச்சாரம் என்றால் என்ன என்பதை நாங்கள் இன்னமும் தெளிவாக உணர்ந்த பாடில்லை. ஸ்காட்ஸ் அல்லது வேல்ஸ் மக்கள் இனத்தைப் பற்றி விமர்சனம் செய்யும் துணிவு எனக்கு இல்லை என்ற போதிலும், இங்கிலீஷ் இனத்தவரைப் பொறுத்த வரை, தேசியக் கலாச்சாரம் ஒன்று தங்களுக்குண்டு என்பதை ஒத்துக் கொள்ளவே அவர்கள் தயங்குகிறார்கள்'' என்று இங்கிலாந்தில், கலைத்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரான, எக்ளிஸ் பிரபு தயக்கமின்றி ஒத்துக் கொண்டார்.

எல்லா நோக்குகளையும் திருப்தி செய்யக் கூடிய இலக்கணம் ஒன்றை வகுப்பதில் நேரத்தை வீணாக்க மாநாடு முற்படவில்லை. கலாச்சாரக் கொள்கைகளை உருவாக்குவதில் எழும் பிரச்சினைகளை விவாதிப்பதில்தான் மாநாடு முக்கிய கவனம் செலுத்தியது. கலாச்சாரம் என்ற சொல்லுக்கு இலக்கணம் வரையறுக்க இயலாமல் போன போதிலும், இந்த விவாதத்திலிருந்தே, கலாச்சாரம் பற்றி மாநாட்டுப் பிரதிநிதிகள் கொண்டிருந்த கருத்துக்கள் தெளிவான விளக்கம் பெற்றன.

குறிப்பாக, வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் பிரதிநிதிகள் நிகழ்த்திய உரையில், இத் தெளிவு காணப்பட்டது. நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்த்து, ஜனநாயகச் சூழ்நிலையைப் பலப்படுத்தித் தனி மனிதனின் ஆளுமையையும் தேசிய ஆளுமையையும் வெளிப்படுத்தும் சக்தி, கலாச்சாரம் என்பது மீண்டும் மீண்டும் தெளிவாக்கப்பட்டது.

1969ஆம் ஆண்டில் தேசியக் கலைத் திருவிழாவில் குடியரசுத் தலைவர் கவுண்டா நிகழ்த்திய உரையிலிருந்து, ஒரு மேற்கோளை ஸாம்பிய நாட்டுப் பிரதி நிதி ஜே. எல். எம். முலேங்கா எடுத்துக் காட்டிய போது, தேசிய ஆளுமையை நிலைநாட்டும் ஆர்வத்தை வலியுறுத்தினார். ‘‘ஒரு பொதுவான கலாச்சாரம் நம்மை ஒன்றுபடுத்தாவிடில், ஒரு தேசிய இனத்தை உருவாக்குவதில் நாம் வெற்றி காண முடியாது. ஒரு நாட்டின் குடி மக்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டிருக்க முடியாது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் கூட, தீவிரமாக மாறுபட்ட கருத்துக்கள் காணப்படலாம். ஆனால் அடிப்படையில் அவர் அனைவரையும் ஒன்றுப்படுத்தும் சக்தி ஒன்று உள்ளது. பொதுவான கலாச்சாரத்தில் அனைவரும் பங்கு கொள்கின்றனர்’’ என்று கவுண்டா கூறியிருந்தார்.

‘‘தனி மனித ஆளுமையை மனிதரிடம் வளர்க்கும் ஒரே சக்தி, கலாச்சாரம் தான். அந்த உணர்வு இல்லாவிடில், சமுதாயம் சீர்குலைந்து, நிலையிழந்து நிற்கும். கலாச்சாரம் என்பது, ஆடம்பர அணிகலன் என்று நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குக் கலாச்சாரம் இன்றியமையாதது என்பது இப்பொழுது பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது’’ என்று ஈரான் நாட்டுக் கலை, கலாச்சார அமைச்சர் பாஹ்ல் பாட் எடுத்துக் காட்டினார்.

நீண்ட காலமாகக் காலனி ஆதிக்கத்தின் கீழ் வருந்தி, இப்பொழுது விடுபட்டு வரும் நாடுகளில், மக்களின் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் தலையாய கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற போதிலும், மக்களின் இன்னொரு வகையான பசியையும் தீர்க்க வேண்டும் என்பதும் உணரப் பட்டுவருகிறது. ‘‘மங்கிப்போன தேசியக் கலாச்சாரத்தை புதுப்பிப்பதில் பிற்போக்கு எதுவுமில்லை. இழந்துவிட்ட ஆன்மாவையும், ஒழுக்க நெறி நியதிகளையும் அது நாட்டுக்கு மீட்டுத் தருவதுடன், முன்னேற்றத்தால் ஏற்படும் நலன்களுக்கு அடிமையாகி விடமால், அந்த நன்மைகளைக் கிரகித்துக் கொள்ள நாட்டைப் பக்குவப்படுத்துகிறது’’ என்று கினியைச் சேர்ந்த செரீப் எடுத்துக் காட்டினார்.

புதிதாகச் சுதந்திரம் பெற்றுள்ள பல நாடுகளை எதிர்நோக்கியுள்ள தர்ம சங்கடமான நிலையை, ஜமேகாவின் அமைச்சரான ஹெக்டர் வின்டர் தெளிவாக விளக்கினார். காலனி ஆதிக்க முறையைச் சார்ந்த கல்வி அமைப்பின் காரணமாகக் ‘‘கல்வி பெற்றவர்களும், வசதி படைத்தவர்களும், கலாச்சாரம் என்றால், ஐரோப்பியக் கலாச்சாரமும் அதன் கலை, இசை ஓவியச் செல்வங்களும் தான், என்று கருதும் போக்கு பரவியுள்ளது இயல்பே. இந்த வாய்ப்புகளை விரிவாக்குவது, கலாச்சாரத் துறையிலும் காலனி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகும் என்று நான் துணிந்து கூறமுடியும். எங்கள் தேசியக் கலாச்சாரப் பாரம்பரியத்தைத் தேடிப் பிடித்து, இனம் காண்பதிலும், அக் கலாச்சாரத்தைப் பாதுகாத்துப் புதுப்பித்துப் பரப்புவதிலும், நாங்கள் தீவிரமான கொள்கையைப் பின்பற்றினால் தான், தேசிய ஆளுமையை வேறெங்கோ தேடும் அவசியத்திலிருந்து தப்ப முடியும். நம் பாரம்பரியத்தோடு இணைந்துவிட்ட ஐரோப்பியக் கலாச்சாரத்தை மக்கள் அறிய வாய்ப்புகளை விரிவாக்க வேண்டும். ஆனால் அதே சமயத்தில் நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்றுள்ள ஆசிய, ஆஃபிரிக்கக் கலாச்சாரத்தின் வளமான அடிப்படைகளை அறிந்து போற்றுவதும் இன்றியமையாததாகும்’’ என்று அவர் கூறினார்.

வளர்ச்சி அடைந்து வரும் பல்வேறு நாடுகளில் இப்பிரச்சினை வெவ்வேறு வகையில் தோற்றமளிக்கிறது. பழமை மரபின் வளம் மிகையாக இருந்தால், அதுவே இன்று ஒரு சுமையாகி, புதுக் கலாச்சாரம் உருவாகுவதை முடக்கக் கூடும்.

வளம் நிறைந்த பழமை மரபைப் போற்றிப் பாதுகாக்கும்அதே நேரத்தில், நவீன, முற்போக்கான வாழ்வின் வளர்ச்சியோடும் வேகத்தோடும் ஒத்துக் செல்ல வேண்டிய தர்மசங்கடமான நிலை, தன் நாட்டை எதிர்நோக்கியுள்ளது, என்பதை துனீசியா நாட்டுக் கலாச்சார, தகவல் அமைச்சர் ஹபீப் போலாரெஸ் தத்ரூபமாகச் சித்திரித்தார். இச் சோதனைக் கட்டத்திலே சரியான பாதைகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளித்து, நிதியுதவி வழங்கி, ஊக்கமும் ஆக்கமும் அளிப்பது அரசுகள் மேற்கொள்ள வேண்டிய சிக்கலான பொறுப்பாகும்,

போலாரெஸ் மேலும் கூறினார்: ‘‘ஆனால் தாங்கள் செய்ய முற்பட்டுள்ளது என்ன என்பதை அரசாங்க அதிகாரிகள் தெளிவாக உணர வேண்டும். துனீசியா போன்ற நாட்டில், ‘தேசியக் கலாச்சாரம்,’ என்றால் என்ன என்பதைத் தெளிவாக விளங்குவதே கடினம். பெர்பர், பூனிக், ரோம, கீழ்த்திசை, அரபு, பெர்பர்—அரபுக் கலாச்சாரங்கள், துனீசியக் கலாச்சாரத்தில் கலந்துள்ளன.



Photo © Luc Joubert, Paris

3. செய்தித் தொடர்புக் கருவிகளும் பொதுமக்கள் பண்பாடும்

"ஒன்றன் பின் ஒன்றாக, ஏழு மொழிக ம், மாறுபட்ட ஏழு கலாச்சாரங்களும் ஓங்கியிருந்த அந்நாட்டில் நாட்டின் ஆதிகுடிகளை இரண்டாந்தரக் குடிமக்களின் நிலைக்கு ஒதுக்கி, அவர்கள் முன்னோர்களின் நினைவையே அகற்றி விடுவதில், இருபதுக்கு மேற்பட்ட ஆட்சிகள் முனைந்து செயல்பட்டுள்ள அந்நிலையில், 'தேசியக் கலாச்சாரம்' என்ற சொல்லே பொருத்தமற்ற சொல்லாகிறது.

"தேசியக் கலாச்சாரத்தை உருவாக்குவது இயலுமென்றே ஏற்றுக்கொண்டால் கூட, இக் கலாச்சாரப் பாரம்பரியத்தை மீட்டுப் பாடத்திட்டங்களிலும் மற்ற கலாச்சார நடவடிக்கைகளிலும் அதைப் புகுத்தி, அனைவருக்கும் அக்கலாச்சார வளங்கள் கிட்டச் செய்வதற்கு எவ்வளவ பெரும் முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும்?"

யுனெஸ்கோவின் ஒத்துழைப்புடன், கலாச்சாரப் பொநளாதாரக் குறிக்கோள்களுடன், மேற்கொள்ளப்பட்டுள்ள துனீஸ்—கார்த்தேஜ் திட்டம், அடுத்த வளர்ச்சிப் பத்தாண்டு காலத்திற்குரிய புதிய நோக்கின் முன்னோடி என்று போலாரெஸ் குறிப்பிட்டார். (துனீஸ்—கார்த்தேஜ் திட்டச் சிறப்பு மலராக வெளிவந்த 'யுனெஸ்கோ கூரியர்' 1971 ஜனவரி இதழைக் காணவும்).

மாநாட்டின் தலைமைச் செயலாளரும் யுனெஸ்கோவின் கலாச்சாரப் பிரிவின் இயக்குநருமான, நைகரைச் சேர்ந்த அமாடோ செய்டோ, மாநாட்டிற்குப் பின் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் நோக்கிலிருந்து மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களையும் மிகத் திறமையாக விமர்சனம் செய்து விவாதப் போக்கின் உட்கிடக்கையை படம்பிடித்துக் காட்டினார்.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் மிகப்பெரிய, உடனடியான பிரச்சினை, அந்நாடுகளில் பெரும்பான்மையினவும், குறிப்பாக ஆஃப்பிரிக்க நாடுகளும், எழுத்தில் பொறிக்கப்படாமல் அடங்கிய, கலாச்சார மரபுகளையும் வளங்களையும் கொண்டிருந்தன என்பது தான், என்று செய்டோ எடுத்துக் காட்டினார்.

அந்நாடுகளின் கலாச்சாரங்களைப் பாதுகாத்துப் போற்றுவது, இன்றே உடனடியாக அவசர நடவடிக்கை எடுப்பதற்குரிய பிரச்சினையாகும். எடுத்துக்காட்டாக, நைகரில், பழைய பாடல்கள், இதிகாசக் கதைகள், நாடோடிக் கதைகள், சமயச் சடங்குகள் ஆகியவற்றை, அவற்றை இப்பொழுது அறிந்தவர்கள் மறைவதற்கு முன்பே உடனடியாக ஒலிப்பதிவு செய்யும் பணியில் ஈடுபட, யுனெஸ்கோவின் உதவியுடன் ஒரு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒலிப்பதிவுப் பொறிகள், திரைப்படச் சாதனங்கள் ஆகியவையும், அந்த நுட்பச் சாதனங்களை இயக்க தொழில் நுட்பக் கலைஞர்களும், மிக அவசரமாகத் தேவைப்பட்டனர். இன்றும் தேவைப்படுகின்றனர். "வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளைப் பொறுத்தவரை, கலாச்சாரத்தின் உட்பொருளும் குறிக்கோளும் என்ன என்று தீர்மானிப்பதே, அவற்றை எதிர்நோக்கியுள்ள சோதனை. பொதுத் தொடர்பு சாதனங்கள் உள்ளவற்றை எவ்வாறு தகுந்த முறையில் பயன்படுத்துவது என்பது, வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் முன்னுள்ள பிரச்சினை. அச்சாதனங்களை எப்படி பெறுவது என்பதை செய்டோ எடுத்துக் காட்டினார்.

சுருள் நகர் — எதிர்ப் பெருநகர்

மக்கள் நெருக்கமும் அசுத்தமும் அச்சுறுத்தும் இன்றைய நகரத் தொகுதிகளை 50ஆண்டு முன்னே பலர் வேறு விதமாகக் கற்பனையில் கண்டனர். அப்போது ஜெர்மனியில் வெய்மாரிலிருந்த புகழ்மிகு பாஹாஸ் கலைக் கழகத்தின் கலைஞர்களும் கட்டடக் கலை வல்லுநரும் பற்றிழை வாய்ந்த வருங்கால நகர்களைக் கற்பனை வடிவில் தீட்டினர். இடப்புறம்: 1923இல் இணைக்கப்பட்ட இப்படம் நெதர்லாந்தைச் சேர்ந்தவரும் குரோப்பியஸின் தோழருமான பால் சிட்ரோயன் கற்பனையில் கண்ட அத்தகைய நகரைக் காட்டுகிறது. இன்று நகர்கள் பெருநகர்களாகி வருகின்றனமயால் கட்டடக் கலைஞர்களும் நகர அமைப்பாளர்களும் ஒளி, இடம், வடிவ வேறுபாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். வலப்புறம்: அலெக்ஸிஸ் காட்நாஃப் வகுத்த காற்றோட்டமுள்ள சுருள் வடிவ நகர். இதன் அமைப்பு எக்ஸ்போ 70இல் நாட்டப்பெற்றது. இதிலுள்ள வீடுகளும், நகர்களும், கருவிகளும், வருங்கால வாழ்க்கையைக் காட்டுகின்றன.



Photo © Paul Almasy, Paris

தங்கள் தேசியக் கலாச்சாரப் பாரம்பரியம், மேலைநாட்டுக் கருத்துக்களாலும் மரபுகளாலும் மூழ்கடிக்கப்பட்டு, அழிந்து விடாமல், காக்க வேண்டுமென்று வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் கவலை கொள்வது இயல்பே. ''கலாச்சாரங்கள், இனங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்பவை'', என்று செய்டோ சுட்டிக்காட்டினார். ஆனால் மற்றக் கலாச்சாரங்களுடன் சிறிதும் தொடர்பின்றி அவை தனித்து நிற்கக் கூடாது. கலாச்சாரத்தைக் காக்கும் நேரத்தில், தங்கள் கலாச்சாரத்தைச் சுற்றி வேலி எழுப்பும் குறுகிய போக்கில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் செல்லக்கூடாது. வளைந்து நெளிந்த வரலாற்றுக் குகைகள் வழியாக முன்னேறிச் சென்று, தேசிய விழிப்புணர்வு, தேசிய ஆளுமை ஆகியவற்றை இனம் கண்டுகொள்ளக் கலாசாரக் கொள்கைகள் வழிவகுக்க வேண்டும் என்பதே, வளர்ச்சிஅடைந்து வரும் நாடுகள் முன்னுள்ள பிரச்சினை. ''மற்றவர்களிடமிருந்து இரவல் வாங்கிய கலாச்சாரத்தை நம்பியிருப்பது, இன்னொருவர் வாழ்க்கையை நாம் வாழ்வதாகும். பழமையிலிருந்து கடன்வாங்கிய ஒரு கலாச்சாரத்தையே நம்பி வாழ்வது, வாழ்விலிருந்து நம்மைத் துண்டித்துக் கொள்வதாகும். இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அந்த இணைப்பு, சுதந்திரச் சூழ்நிலையில் செய்யப்பட வேண்டும். உண்மையில் அது தனி மனிதன் ஒவ்வொருவரும் தாமாக உருவாக்க வேண்டிய இணைப்பாகும்,'' என்று போலாரெஸ் கூறினார்.

''ஒவ்வொருவரும் எந்த நிலையை எய்த படைப்பிலேயே ஆற்றலைப் பெற்றுள்ளாரோ, அந்த நிலையை முழுதும் அடைய வழிசெய்ய வேண்டும் என்பதே கலாச்சாரத்தின் தலைசிறந்த நியதியாகும்'' என்று ஆங்கில எழுத்தாளரான தாமஸ் கார்லைல் கூறியுள்ளார். தனி மனிதர் என்ற முறையிலும் தேசியக் குடிமக்கள் என்ற முறையிலும், ஒவ்வொரு காட்டுக் குடிமக்களுக்கும் இதற்கான வாய்ப்பை அளிக்கவே, மாநாட்டுப் பிரதிநிதிகள் விழைந்தனர்.

கலாச்சாரத்தை எய்த ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை உண்டு என்பதையும், இந்த உரிமையை உறுதிப்படுத்த எல்லா நாடுகளும் ஓரளவாகிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும், வெனிஸ் மாநாடு ஒருமித்து ஏற்றுக்கொண்ட நேரத்தில், பாமரமக்கள் கலாச்சாரம் என்ற வல்லமை மிக்க புதிய சக்தியை எவ்வாறு சமாளிப்பது என்பதில் ஒருமித்த முடிவு காண இயலவில்லை.

இப்பிரச்சினை பற்றி விவாதம் நடந்த கட்டத்தில், இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்ற அவசர உணர்வும், அதே சமயத்தில் விவாதத்தில் கடுமையும் காழ்ப்பும், ஓரளவு காணப்பட்டன. இந்த மாநாட்டிற்கு மட்டுமல்ல, கலாச்சாரப் பசிகொண்ட உலகுக்கும் ஆபத்தாக அமைந்திருந்த இப்பிரச்சினையின் தன்மை என்ன?

பாமர மக்கள் கலாச்சாரத்தின் விளைவுகளைக் கண்டு மாநாட்டுப் பிரதிநிதிகள் அச்சம் கொண்டனர் என்பதில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன், பைத்தோக்ளிஸுக்கு எழுதிய கடிதத்தில் எபிக்யூரஸ் குறிப்பிட்டது போல், 'கலாச்சாரத்தில் சிக்காமல் தூர விலகிச் செல்லுங்கள்'

Photo Bjorn Rodhe © Galon AB Gotesberg
Published in "Filosofi for Gymnasiet" by P. Ericson, H. Hof, A. Jeffner (Almqvist and Wiksell, Stockholm)



குருடன் கூறும் பொய்

குருடன் கூறும் பொய் பற்றிய கற்பனைக் கதையை இப்படம் காட்டுகிறது. ஏதேனும் ஒரு பகுதியை முழுப் பொருளாகக் கொள்ளக் கூடாது எனும் உண்மையை விளக்கும் இவ்விந்தியக் கதை ஆசியா முழுவதும் பரவியுள்ளது. கண்கள் கட்டப்பெற்ற ஐவரைக் கொண்ட இப்படம் ஸ்வீடனில் தத்துவ நூலொன்றில் காணப்படுகிறது.

இக்கதையின்படி இந்தியக் கிராமத்திற்கு வந்த ஒரு பயணி தனது யானையைப் பலகணியோ வேறெந்த ஒளி வாயிலோ இல்லாத களஞ்சியத்தில் இரவில் அடைத்தான். கிராம மக்கள் உள்ளே நுழைந்து இருட்டில் அவ்விலங்கைத் தடவிப் பார்த்தனர். வெளியே வந்ததும் அதைப்பற்றி விவரித்தனர்.

துதிக்கையைத் தடவியவன் ''அஃது ஒரு பெரிய குழாய்'' என்றான்.

காலைத் தடவியவன், ''முட்டாள், அது மரம்'' என்றான்.

காதைத் தொட்டவன், ''அது மிகப் பெரிய இலை'' என்றான்.

உடலைத் தடவியவன், ''அது பரந்த சுவர்'' என்றான்.

வாலைப் பிடித்தவன், ''அஃது உறுதியான கயிறு'' என்றான்.

ஒவ்வொருவனும் தான் சொன்னதே சரியென எண்ணினான். அங்கு ஒளி புகுந்திருக்குமாயின் யானையின் உண்மை உருவம் தெரிந்திருக்கும்.

கலைஞனின் உரிமை – முன்னேற்றத்தின் ஊக்கம்

என்ற எச்சரிக்கையை, மாநாட்டுப் பிரதிநிதிகள் உறுதியாக நிராகரித்திருப்பார்கள்.

அரசாங்கத் தலையீடு மிகையாக இருப்பதுதான் பேராபத்து என்று சில பிரதிநிதிகள் கருதினர். பாமர மக்களோடு தொடர்பு கொள்ளச் செய்யும் பிரச்சாரச் சாதனங்களால் கேடு விளையும் என்று வேறு சிலர் அஞ்சினர். உலகக் கலாச்சாரப் பாரம் பரியம் அதன் 350 கோடிமக்களுக்கும் கிடைக்கச் செய்வதில், நாம் கையாளக் கூடிய வழிமுறைகளில்தான் ஆபத்து உள்ளது என்பதை அவர்கள் கண்டனர். பிரச்சாரம் என்ற பயங்கரப் பாறையில் மோதாமலும், பயனற்ற அற்பப் பொருட்கள் என்ற படுகுழியில் விழாமலும், எப்படிப் பாதுகாப்பாக நடுவழியில் செல்வது என்பதுதான் பிரச்சினையாயிற்று.

சோவியத் ரஷ்யாவைப் பொறுத்தவரை, இப்போராட்டத்தில் பெருமளவு வெற்றி பெற்றாகி விட்டது என்று ரஷ்யக் கலாச்சார அமைச்சர் மதாம் பர்ட்சேவா கருதினார். அரசாங்க நடவடிக்கை ஆபத்தாக அமையாமல், பயனுள்ள கலாச்சாரக் கொள்கையின் இன்றியமையாத அடிப்படையாக அமைந்துள்ளது என்று அவர் நம்பினார்.

பாமர மக்களிடம் கலையைப் பரப்புவதில், வர்த்தகப் போக்குகள் பெரும் கேடு விளைவித்துள்ளன என்று பர்ட்சேவா குற்றம் சாட்டினார்.

“ ‘வர்த்தகக் கலாச்சாரம்’ என்று சொல்லப்படுவதை, நவீன பொதுப் பிரச்சார சாதனங்கள் மூலமாகப் பரப்புவதைத் தடைசெய்ய, யுனெஸ்கோவின், அதன் செயற்குழுவின், சமூக உரிமைகளையும் கடமைகளையும் பயன்படுத்த வேண்டிய கட்டம் வந்துவிட்டதென்று நான் கருதுகிறேன். இவ்வர்த்தகக் கலாச்சாரம், மக்கண்மைக் கோட்பாட்டுக்கு முரண்பட்டதாய் இருப்பதுடன், போர், வன்முறை, இனவெறி, சட்டத்தை மீறிய செயல்கள், ஒழுக்கத்தைக் குலைக்கும் எழுத்து, மிருகத்தன்மை ஆகியவற்றை வளர்க்கின்றது. ரேபேல், ஷேக்ஸ்பியர், பீத்தோவன், டால்ஸ்டாய் போன்ற சிறப்பு மிக்கக் கலைஞர்களால் வளமாக்கப்பட்ட கலையின் அழியாச் செல்வமும் அழகும் மறைந்து, செயற்கைக் கலாச்சாரத்தின் போலி வீரர்கள் நம் இளைஞர்களை அடிமைப்படுத்த நாம் இடம் கொடுக்கக் கூடாது.”

சோவியத் யூனியனின் பிரச்சினைகளிலிருந்து, சூடான் நாட்டுப் பிரச்சினைகள் பெரிதும் வேறுபட்டு இருந்த போதிலும், வர்த்தகக் கலாச்சாரம் பற்றிய அச்சத்தின் எதிரொலி, சூடான் நாட்டுத் தலைமைப் பிரதிநிதி எச். ஏ. யூசுப் பேச்சிலும் காணப்பட்டது.

“கிராம வாழ்வோடு மேலும் மேலும் தொடர்பு இழந்து, நகர வாழ்வோடு பெரும் அளவில் இணைந்து, துறவு நிலையிலிருந்து சமயச் சார்பற்ற நிலையை நோக்கி, வேளாண்மைப் பொருளாதாரச் சார்பிலிருந்து, இயந்திரத் தொழில் சார்பான நிலையை நோக்கிச் சென்று வரும் ஒரு சமுதாயத்தில், பல கலாச்சாரப் பிரச்சினைகள் எழுகின்றன. குடும்ப வாழ்வின் சீர்குலைவு, சமுதாய, ஒழுக்க நிலைகளில் பொறுப்பற்ற தன்மை, நகைச் சுவையில் பண்பு கெட்ட நிலை, பாலுணர்வைப் பற்றித் தாராள நோக்கு, மேலைநாட்டு நாகரிகத்தின் மேல் வாரியான அம்சங்களுடன் நெருங்கிய பழக்கம் ஆகியவற்றால் கலாச்சாரத் துறையில் ஒரு சூனிய நிலை எழுகிறது. புதுப் பாதைகளைக் கண்டுபிடிக்காமல், பழைய பாதைகளை நிராகரிக்கும் ஆபத்து எழுகிறது” என்று அவர் எச்சரித்தார்.

கலாச்சார சூன்ய நிலை எழக்கூடும் என்றும், வர்த்தகப்போக்கு, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றின் நெறி கெட்ட, சந்தர்ப்பவாதச் சேர்க்கையில் பிறக்கும் இரண்டாந்தரமான போலிக் கலாச்சாரம் அச்சூன்ய நிலையில் இடம் பெறக்கூடும் என்றும் கவலை, பல பிரதிநிதிகள் உள்ளத்தை வாட்டி வருத்தியது என்பது புலனாயிற்று.

மெக்ஸிகோ நாட்டுப் பிரதிநிதி, டாக்டர். ஜே. எல். மார்ட்டினெஸ் இந்தக் கவலைக்குக் குரல் கொடுத்தார். “அண்மையில் கலாச்சாரத்திற்குப் புதியதொரு பொறுப்பு தோன்றியுள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ள ஓருலகில், குறிப்பாக நகரங்களில், அதிர்ச்சிகளைத் தானே தாங்கவல்ல ஒரு சக்தியாகக் கலாச்சாரம் உருவாகியுள்ளது...தொழில் வளர்ச்சியினாலும் நுட்ப அறிவியல் வளர்ச்சியினாலும், நகரங்களில் அபாயகரமான மூடுபனி பரவி வருகிறது. கல்வியின் சீரற்ற தன்மையின் காரணமாக, நுட்பத் தொழில் துறையில் பயிற்சி பெறும் மாணவர்கள், தங்கள் சொந்த மொழி பற்றி ஒரு சிறிதும் அறியாத நிலையும், தங்கள் பயிற்சிக்கு அப்பாற்பட்ட துறைகள் பற்றி ஒரு சிறிதும் அறியாத நிலையும், உருவாகி வருகின்றன. அந்த நேரத்திலிருந்து பார்த்தால், பண்பட்ட நாகரிக வளர்ச்சி எதற்கும் தடையாக உள்ள ஒரு பயங்கர மூடுபனி பரவுவதற்கு, நுட்ப அறிவியல் வளர்ச்சி உதவியுள்ளது” என்று அவர் எடுத்துக் காட்டினார்.

தொழில் நுட்ப வளர்ச்சியோ, வல்லமை மிக்க இச்சக்தியைத் தவறான வழிகளில் பயன்படுத்துவதோ, மட்டும் தான் ஆபத்து என்பதில்லை என்ற உண்மையை டாக்டர் மார்ட்டினெஸ் தெளிவாக உணர்ந்திருந்தார். கலாச்சார விவகாரங்களில் அரசு தலையிடும் போது, எந்தப் பக்கமும் சாயாமல் நடு நிலைப் பாதையில் மிக எச்சரிக்கையாகச் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

“எழுத்தாளரும் கலைஞர்களும் சமூக, பொருளாதார வாழ்வில் பங்கு கொள்வதற்குச் சாதகமான நிலையை உருவாக்கும் அதே நேரத்தில், சிந்தனை செய்யவும் படைப்புகளை உருவாக்கவும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது, சில சமயங்களில் அரசுக்கு மிகக் கடினமான பொறுப்பாகின்றது. ஆயினும் குறை கூறவும் எதிர்ப்பு தெரிவிக்கவும் வாய்ப்பு இருப்பது, குடிமக்களின் மனநலனுக்கு இன்றியமையாதது என்பதுடன், சமூக மாறுதலுக்கும், முன்னேற்றத்துக்கும் கூட அடிப்படைத் தேவையாகிறது. நம் தேச பக்தர்களிலும், கலாச்சாரத் தலைவர்களிலும் சிறந்தவர்கள், தங்கள் காலத்தில் எதிர்ப்பு அணித் தலைவர்களாகவும், புரட்சிவாதிகளாகவும் விளங்கியவர்கள் என்பதை நாம் எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது” என்று டாக்டர் மார்ட்டினெஸ் சுட்டிக் காட்டுகிறார்.

போருக்குப் பிந்திய ஆண்டுகளில், அறிவியல் புரட்சியின் விளைவுகளையும், அவற்றால் கலாச்சார வளர்ச்சியில் ஏற்பட்ட விளைவுகளையும், மாநாட்டுப் பிரதிநிதிகள் உணரத் தவறவில்லை. மொஸார்ட்டின் இசை நாடகமான, ‘மந்திரப் புல்லாங்குழல்’ எழுதப்பட்ட காலம் முதற்கொண்டு, இசை அரங்குகளில் அந்நிகழ்ச்சிகள் அத்தனையும் எத்தனை பேரைக் கவர முடிந்ததோ, அதற்கு மேலாக அதிகப் பேரை, டெலிவிஷனில் இந்த நாடகத்தின் ஒரே நிகழ்ச்சி கவர முடிகிறது என்பதை நாம் உணரும்போது, டெலிவிஷன் போன்ற சாதனங்களால் பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதில் எவ்வளவு மகத்தான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

இந்தச் சாதனங்களின் வளர்ச்சியினால் தீங்குகள் ஏற்படாமலுமில்லை. ஏறக்குறைய ஒவ்வொரு வீட்டிலும் ஒரு டிரான்சிஸ்டர் அல்லது டெலிவிஷன் சாதனம் அமைக்கப்பட்டுள்ளதால், இச்சாதனங்கள் மூலம் பரப்புவதற்கு எண்ணற்ற பல நிகழ்ச்சிகளைத் தயார் செய்ய வேண்டியுள்ளது. இதன் விளைவாக நிகழ்ச்சிகளின் தரம் குறைந்து, ரசிகத்தன்மை இல்லாமல் பலரும் அசை போடுவதற்கான கலைச் சவ்வு மிட்டாய்கள் பலவற்றைத் தயாரித்துக் குவிக்க வேண்டியுள்ளது.

வேறெந்தத் தலைமுறையில் இருந்ததைக் காட்டிலும், இத்தலைமுறையில் கலை பெரும் அளவில் பரப்பப்படும் சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம் என்று எக்ளிஸ் பிரபு எடுத்துக் காட்டினார். “கலையைப் பறிகொடுத்துள்ள பாமர மக்களுக்குக் கலையை அவ்வப்போது கொணர்ந்து தரும் உரிமையும் பொறுப்பும், கலைத் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் கலை வல்லுநர்க்கும் மட்டுமே இருந்த நிலை இப்பொழுது மாறியுள்ளது. இன்று அவர்கள் வீட்டு வாசலைத் தாண்டி, கலை கொண்டுவரப்பட்டு படைக்கப்படுகிறது. கார்களில் பயணம் செய்துகொண்டே அவர்கள் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கின்றனர். அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் நேரத்திலேயே, ஒலிபெருக்கிகள் மூலம் அவர்களுக்கு அமைதியூட்டும் இசை ஒலி பரப்பப்படுகிறது.

“பொதுத் தொடர்புச் சாதனங்களில் இணையற்ற வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஒவ்வொரு நாளும் அளிக்கப்படுகின்ற கலைப் படைப்புகளின் தரத்தை நாம் உயர்த்திப் பாதுகாப்பது தான் நம் அவசரக் கடமையாகிறது. வர்த்தகக் கவர்ச்சி விளம்பரங்களினாலோ, அரசியல் பிரச்சாரங்களினாலோ, பாமர மக்கள் அனைவரையும் இப்பொதுத் தொடர்புச் சாதனங்கள் மூழ்கடித்துவிடக் கூடிய அபாயம் பெரிதாக உள்ளது. இந்நிகழ்ச்சிகளால் கவரப்படும் ரசிகர் கூட்டத்தில் அடங்கியுள்ள தனிமனிதர்களின் ஒழுக்கத்தைப்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

Photo Bruno Suter © Editions Hermann, Paris From "Osaka" by B. Suter and Peter Knapp

ஓ! ஜோனா,
அவர்
திமிங்கிலத்தின்
மேல்
வாழ்ந்தார்



Photo Sven Gillsater, Stockholm © G. Bern, Paris

Photo Heinz Jagusch © A. F. Bucharest, Romania



Photo J. P. Laffont © Gamma, Paris

மேலே: ரோமானியாவில் மீன் பிடிப்பவர்கள் தமது பொழுது போக்கிற்காக ஜோனாவைப் போல் வாய்ப்பான இடத்தைத் தெரிந்து கொண்டுள்ளனர். மேலே இடப்புறம்: கழிதாண்டுபவர் கண்ணாடியில் தெரியும் தமது உருவத்துடன் போட்டியிடுவது போல் காணப்படுகிறார். இடப் புறம்: இந்தோனேசியாவின் மரபான எருமைப் பந்தயம். வலப் புறம்: அமெரிக்க இளைஞர்கள் வழக்கத்திற்கு மாறாக—உள நிறைவுதரும் வகையில்— நாட்டுப் புறங்களை நாடிச் செல்கின்றனர்.



Photo Bruno Suter © Editions Hermann, Paris From "Osaka" by B. Suter and Peter Knapp

படைப்பின் அற்புதம்

''காலத்திற்கேற்ற கலைப் படைப்பை மக்கள் ஏற்றுக்கொள்வர்'' என்று 19ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சு வரலாற்றறிஞர் ஜே. ஜே. ஆம்பியர் கூறுகிறார். கேலித் திரைப்படத்தில் பெல்ஜியக் கலைஞர் ஜே. எஃப். ஃபோலன் மனிதனின் மூளையிலிருந்து ரோஜா மலர்கள் வெளிவருவதைத் தீட்டியுள்ளார்.

பண்பாட்டின் பல்வேறு கூறுகள்

சென்ற ஆண்டு வெனிஸில் யுனெஸ்கோ நடத்திய பண்பாட்டுக் கொள்கை பற்றிய மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துகளைச் சுருக்கமாக மேற்கோள்களாக இங்கு தருகிறோம்.

மொராக்கோ

முதல் மனிதன் நீர் குடிப்பதற்காக குடுக்கையைக் கையாண்டது பலன் கருதிய செயலாகும். அவன் களி மண்ணினால் குடுக்கை போன்ற குவளையைச் செய்ய முயன்றதும் பயன் கருதிய செயலேயாகும். ஆனால் அதை அலங்கரிக்க முயன்றது பயன் கருதிய செயலன்று; அவனது அழகார்வத்தைப் பிரதிபலிக்கும் செயல். இதுவே பண்பாட்டின் தனி இயல்பு.

முகமது எல். ஃபாசி
பண்பாட்டுத் துறை அமைச்சர்

ஹங்கேரி

பண்பாட்டைப் பலரிடம் பரப்பி கலைஞனுக்குப் படைப்புரிமை அளிப்பது நல்ல பண்பாட்டுக் கொள்கையாகும். 150 ஆண்டுகளுக்கு முன் ஹங்கேரிய கவிஞராகிய சாண்டார் டெடோஃபீ உள்ளொளியாகிய கதிரொளி எல்லா வீடுகளின் பலகணிகளிலும் ஒளிர வேண்டுமென எழுதியபோது இக்கருத்தையே தெரிவித்தார்.

பால் இல்கு
பண்பாட்டு அமைச்சர்

பிரான்ஸ்

தனது பண்பாடே மிகச் சிறந்ததென்று நம்பாமலிருப்பதோ, பிறருக்கு முற்றிலும் வேறான உள நோக்கு தேவைப்படுமென உணர்வதோ அரிதென நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். ஆயினும் ஒவ்வொரு நாகரிகத்திலும் காணப்படும் உண்மையான மனிதப் பண்பிற்கு நாம் ஊக்கமளிக்கவேண்டும். எந்த நாடாவது விரும்புமானால் அதன் வளங்களை வகைப்படுத்தி அதன் நாகரிகத்தை உள்ளும் புறமும் அறியவைக்க பிரான்ஸ் உதவத் தயாராக இருக்கின்றது.

எட்மண்ட் மிஷேலெட்,
பண்பாட்டு அமைச்சர்

சோமாலியா

ஒரு சமூகமோ, சமூகங்களின் தொகுதியோ தெரிந்து கொள்ளும் வாழ்க்கை நெறியே பண்பாடு. சமூகத்தின் மரபுரிமையான பண்புக் கூறுகளும் உளப்பாங்கும் சேர்ந்த தொகுதிதான் பண்பாடு.

முகமது செக் ஹாசன்
கல்வி அமைச்சு, பொது இயக்குநர்

ஆஸ்திரேலியா

பண்பாட்டைக் குறுகிய நோக்குடன் பார்த்தல் கூடாது. உண்மையில் வாழ்க்கைக்கு வளமூட்டும் திறன் அதில் அடங்கியுள்ளது. ஒரு வகையில் வாழ்க்கைக் கூறுகளிலெல்லாம் இருக்கவேண்டிய பண்பாக அதைக் கருதலாம். ஆஸ்திரேலியாவில் பண்டைய நிலத்தின் இயற்கைச் சூழ்நிலையும், வளமான வன வாழ்வும், கதிரவனொளிப் பெருக்கும் திறந்தவெளி வாழ்க்கையையும் விளையாட்டுக் கலையையும் நமது வாழ்வின், நமது நாட்டுப் பண்பாட்டின் இன்றியமையாத இயல்புகளாகச் செய்துவிட்டன. பண்டைய கிரேக்க நாட்டின் பண்பாடும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

பண்பாட்டின் இயல்புகளுக்கு நாம் இன வரையறை விதிக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, வெளிநாடுகளிலிருந்து நமது நாட்டுக்கு வந்தவர்களின் வாயிலாக ஐரோப்பிய பண்பாட்டின் சிறப்பை நாம் அறிகிறோம். ஆசிய நாடுகளின் தொடர்புகளின் விளைவாக அவற்றின் பற்பல பண்பாடுகளின் வளமும் உரமும் நமது கலைஞர்களின் கருத்தையும் கற்பனையையும் கவர்ந்துள்ளன. பண்டைய ஆஸ்திரேலிய கலை, பண்பாடு ஆகியவற்றை அறிந்து மதிக்க நாம் கற்றிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது எனலாம்.

மாண்புமிகு நிகல் பவன்,
கல்வி, அறிவியல் அமைச்சர்

ஈராக்

பண்பாடு என்பது ஒரு நாட்டவரின் கூட்டு அறிவுச் சாதனை; அவர்களின் பண்புத்தரங்கள், விழைவுகள், வாழ்க்கை நெறி ஆகியவற்றின் தொகுதி.

சாத் அப்துல்பகி
கல்வி அமைச்சர்

தொழிற்சங்கங்களின் உலகக் கூட்டமைப்பு

தொழிலாளர் கலையையும் இலக்கியத்தையும் பயிலாவிடினும் இவற்றின் உள்ளார்ந்த பண்புகளை உணர்ந்து பாராட்டுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இவை மட்டும் பண்பாடு ஆகா. பண்பாடானது ஒப்பனையும் பொழுது போக்குமாக மட்டுமிருக்குமானால் அது பயன்படாது. அஃது அறிவியல், தொழில் நுட்பம், கலை, விளையாட்டு, (பொருளாதாரம், தொழிற்சங்கம், அரசியல் ஆகிய) இன்றியமையாத சமூகப் பண்பாடு அனைத்தும் ஒருங்கியைந்த முழுமையாக விளங்க வேண்டும்.

இலையுதிர் காலத்தில் ஒரு நாள் ஜாரஸ் நாட்டின் வழியே சென்றபோது சுமை தாங்கிய ஒரு பெண்ணைக் கண்டான். அவன் அவளை வணங்கி இயற்கை எழிலைப் பற்றிக் குறிப்பிட்டான். அவள் ''என் முதுகிலுள்ள மரத்தை எடுத்துவிடுவாயானால், தலை நிமிர்ந்து மரங்களின் எழிலைக் காண்பேன்'' என்றாள்.

மாரிஸ் காஸ்டாட்
தொழிற் சங்கங்களின் உலகக் கூட்டமைப்பு

மெக்ஸிக்கோ

உடனடியான தேவைகள் நீங்கி, பாதுகாப்பும் உரிமையும் கல்வியும் உடல் நலமும் பெற்றபின் மனிதன் முழு மனிதனாக வேண்டும்; அதாவது தனது அறிவு, கற்பனை, சிந்தனை ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

ஜோஸ் லூயிஸ் மார்டினெஸ்
தேசிய நுண்கலை நிலையத் துணை இயக்குநர்

போப்பாண்டவரின் மாவட்டம்

பருப்பொருள் சார்ந்த பிற காரியங்களைப் போலல்லாமல் பண்பாட்டு வசதிகளினால் அரசுக்குத் தக்க ‘‘ஈடு’’ கிடைப்பதில்லை; சில வேளை நன்றிக்கேடே ஈடாகக் கிடைக்கின்றது. ஆனால் பரந்த, நெகிழ்வான, தன்னலமற்ற இப்பணி, முழு வளர்ச்சிக்கு உறுதுணையாக பண்பாட்டை வளர்ப்பதைத் தடைசெய்யக்கூடாது:

பெருந்தகை ஆந்திரே-ஜேக்விஸ் ஃபூகெராட்,
அரசுச் செயலகத்தின் அறிவுரையாளர்

கயானா

சிறிய, வலிமை குன்றிய நாடுகளில், 20ஆம் நூற்றாண்டின் தாக்குதலை எதிர்த்து, அதே நேரத்தில் வளர்ச்சியைத் தடுக்கும் குறுகிய கோழை நோக்கைத் தூண்டாத பண்பாட்டுக் கொள்கை வளர வேண்டும்.

எம். டபிள்யூ. கார்ட்டர்,
செய்தி, பண்பாட்டுத்துறை அமைச்சர்

ஈரான்

உலகை விளக்கும் வகை பண்பாடு. அவை மாற்றும் வகை அறிவியல். ஆனால் இதற்காக அவை இரண்டையும் பிரித்தல் கூடாது. அறிவியல் என்பது பண்பாடாக இருப்பதால் அதை இணைக்கவேண்டும். அவ்வாறு இணைப்பதே பண்பாட்டுக் கொள்கையின் முதற் பணியாகும். பண்பாட்டுக் கொள்கை என்பது தனி அரசாங்கங்களைச் சார்ந்ததாகையால், யுனெஸ்கோ உலகக் கூட்டுறவை வளர்க்க முயலவேண்டும், அதுதான் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ச்சியுறும் நாடுகளுக்குமுள்ள விஞ்ஞான இடைவெளியை நீக்கும் ஒரே வழியாகும்.

மெஹ்ர்டாட் பஹ்ல்பாட்
பண்பாடு, கலைத்துறை அமைச்சர்

கினி

பொதுமக்கள் பண்பாடு உயர்ந்தோர் பண்பாட்டினின்று வேறுபட்டது; ஆயினும் தாழ்ந்ததன்று. அது வெடித்தெழும் படைப்பாற்றல். அதை, கருத்தை வெளியிடப் புதுவழியை நாடி, முற்றிலும் வெளியிடமுடியாத நிலையை அடையும் அல்லது மறைவியலான மொழியைக் கண்டுபிடிக்கும். சில அறிஞர்கள் அல்லது கலைஞர்களின் அகநிலைப் பண்பிற்கு ஒப்பிடலாம். பண்பாடும் மாயமந்திரமும் உண்மையில் வேறுபட்டவை.

செய்க் செரிஃப்
பெர்லினில் கினியின் தூதுவர்

டென்மார்க்

படைக்கலச் செலவின் காரணமாக பண்பாட்டுப் பிரச்சினைகளைப் புறக்கணிக்கும் சமூகம் உலகில் எதுவுமில்லை எனலாம். தொழில் நுட்பம் செங்குத்தான நிலையில் வளர்ந்து செல்ல, நாம் இடைநிலைக் கோணத்தில் சிந்திக்கிறோம். தொழில் நுட்பப் புரட்சிக்கேற்ப நமது சிந்தனை முறையில் புரட்சி நிகழவில்லை.

சி. ஹெல்வெக் பீட்டர்சன்
பண்பாட்டுத்துறை அமைச்சர்

டோகோ

பல முரண்பாடுகள் சிந்திக்கத் தக்கவை. பண்பாடு இன்றுள்ளது போல் என்றும் வளமுற்றிருக்கவில்லை; எனினும் அதைப்பற்றி இன்று மிகுதியாக ஐயப்பாடு எழுகின்றது. அஃது இன்று யாங்கணும் பரவியுள்ளது; ஆயினும் உட்பிளவுகள் மலிந்துள்ளன. இவ்வளவு பரவியிருந்தும் அதன் முக்கிய குறிக்கோளாகிய மனிதனை மறந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. பண்பாடு இன்று தன்னைப் பாதுகாக்க பல தொழில் நுட்பத் துணைகளைப் பெற்றுள்ளது. ஆனால் அழிவு அதை எதிர் நோக்கியுள்ளது. ஹிரோஷிமாவில் பொருட்காட்சி மனையிலுள்ள அழிவுக் காட்சிகளைக் காணும்போது, ஒரு நாள் உலகம் முழுவதும் இந்நிலையில் இருக்கக் கூடும் என்றும், நமது அழிவை நினைக்க அப்போது யாரும் இருக்க மாட்டார்கள் என்றும் நினைக்கிறேன்.

என் சுகான் பெர்டினுண்ட் அப்லமாக்னன்
யுனெஸ்கோ நிரந்தர தூதுவர்

ஸ்வீடன்

இளைஞர்களுக்குப் பண்பாட்டுத் தனிமை என்பது நாட்டின் தனிமை போன்று பொய்ம்மையானதாகவும் பொருளற்றதாகவும் தோன்றுகிறது. மறைவான நாகரிகத்தைத் தோற்றுவிக்க கலைஞர்களை வற்புறுத்துவதோ, தூண்டுவதோ அரசியல் சமுதாயத்தின் பெரும் பிணியின் அறிகுறியாகும். கலை என்பது சமூகத்தின் விளைவாக இருப்பதுடன் சமூகத்தை மாற்றும் கருவியாகவும் இருக்கின்றது. கலைஞர்கள் தாம் விரும்பிய வழிகளில் தமது கருத்துக்களைத் தெரிவிக்க உரிமை பெறவேண்டும். கலைஞனின் உரிமையைப் பறிப்பவர்களுக்கு எவ்வளவு கடுமையான விளைவுகள் இறுதியில் ஏற்படுகின்றன என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன.

ஸ்வென் மோபர்க்
கல்வி அமைச்சர்

ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசு

அரசின் வரம்பற்ற அதிகாரத்தின் தீமையை உணர்ந்து அதைத் தவிர்க்க விழையும் ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசு வற்புறுத்துதலை விடுத்து, துணைபுரிந்து பேணுதலையே செய்து வருகின்றது. அரசும் சமுதாயமும் மனிதனின் பண்புத்தரங்களையும் மதிப்பையும் பாதுகாக்க வேண்டும். கலை தனது சட்டத்திற்கு உட்பட்டே வாழும் என்றும் புறவிதிகளுக்குட்பட்டால் இறந்து விடும் என்றும் காமஸ் குறிப்பிடுகிறார். அறிவின் படைப்பாற்றல் தன்னுரிமையுடன் திகழ்ந்தால்தான் ஆட்சித்துறையும் பண்பாடும் ஒருங்கிணைந்திருக்க முடியும். நாட்டின் எல்லைக்குள் புகலிடம் தேடும் பண்பாடு இறுதியில் அழிந்துவிடும்.

பெர்ன்ஹார்டு வோகல்
லாண்டரின் கல்வி, பண்பாட்டுத் துறை அமைச்சர்களின் நிரந்தர மாநாட்டுத் தலைவர்

ஸ்பெயின்

திட்டம் என்பது தர வரிசைப்படுத்துவது ஆகும். மாருத மாதிரிகளும் உயர் கலைவிதிகளும் இருப்பினும் (அவ்வாறு இல்லாதிருக்கலாம்), மாதிரிகள், வகைகள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பிரச்சினையும் எழுகின்றது. உடனே ஆட்சித்துறையினர் பழங்கொள்கைகளுக்கு அடிமையாகும் ஆபத்தும் எழுகின்றது. பண்பாட்டுக் கொள்கை சில கலைநய உணர்வுகளிலும் கலைப்பாங்குகளிலும் மாற்றம் ஏற்படுத்த முனையுமாயின் இரு தரப்பிலும் பிணக்குகளும் தலையீடுகளும் எதிர்ப்புகளும் தோன்றும். இது கவனிக்கப்படத் தக்கதாகும். ஏனெனில் தற்கால அரசு, கலையில் தனது கொள்கையைப் புகுத்தவில்லையெனினும், தன்னையும் அறியாமலே பொதுமக்களின் கலைநய உணர்வைத் தன் வழிப்படுத்தி மாற்ற முடியும். தனியார், வணிகத் துறைகளும் வேண்டுமென்றே தயக்கமின்றி இதைச் செய்து வருகின்றன.

விழுங்குவது அல்லது விழுங்கப்படுவது கலையின் இயல்பாகத் தோன்றுகிறது. இதைப் பொறுத்த வரையில் எல்லா நாடுகளும் தாக்குபவையாகவோ தாக்கப்படுபவையாகவோ இருக்கின்றன. இன்னும் பிற சிக்கல்களும் உள்ளன. ஒவ்வொரு பண்பாடும் ஓரளவு தன்னையே விழுங்கிக் கொள்கிறது. புதிய கலைப்பாங்கு, வகை, கலைநய உணர்வு ஆகியவை வளர்வதற்காகத் தமக்கு முன்னிருந்தவற்றை அழிக்க வேண்டியிருக்கின்றது.

எமிலியோ காரிகுவஸ்
யுனெஸ்கோ நிரந்தர தூதுவர்

இத்தாலி

அரசின் அடக்கு முறைத் தலையீட்டினால் எண்ண உரிமையும் கலை உரிமையும் நசுங்கும் தாழ்வான நிலைக்காக வருந்தும் நிலை இன்னும் வருங்காலத்திலும் வராதென நம்புகிறோம்.

விட்டோரினோ வெரோனீஸ்
யுனெஸ்கோவின் முன்னாள் பொது இயக்குநர்

காமரூன்

இசை, நடனம், முகமூடி, சிலைகள் ஆகியவை இல்லாமலும், பல தலைமுறைகளாகப் பெற்றுள்ள சொல்லறிவும் குலங்களின் காவிய இன்பமும் இல்லாமலும் செழித்தோங்கும் ஆஃபிரிக்க மக்களை எவரும் நினைத்துப் பார்க்க முடியுமா? கலைஞர்கள் தமது காலத்திற்கேற்ப நம்பிக்கையுடனும் மதிப்புடனும் நம்பத்தக்க முறையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடிய வழி வகைகளைச் செய்தாலன்றி, கலையைத் தற்கால உலகின் தாக்குதலினின்று எவ்வாறு காக்க முடியும்? அரசாங்க உதவியின்றி இதை எவ்வாறு செய்ய இயலும்?

Photo © Jeanne Hamilton, New York

இருமுக, பலமுக ஒப்பந்தங்கள் பலவற்றில் பண்பாட்டுக் காரியங்கள் தவிர்க்கப்படுகின்றன அல்லது தேவையற்ற இன்ப நுகர்வாகக் கருதப்படுகின்றன.

ஸாக்கே மாங்கோ சூ
கல்வி, இளைஞர்,
பண்பாட்டுத்துறை அமைச்சர்

பெல்ஜியம்

கி. பி. 2000க்கு இன்னும் 30 ஆண்டுகளே உள்ளன. அவ்வாண்டில் 140 வேலை செய்யும் நாட்களே இருக்கலாம். மீதி 225 நாட்களைக் கல்வி புறக்கணிக்கக் கூடாது.

இப்போது அனைவரும் கல்வி பெறத் தொடங்குகின்றனர். ஆனால் வருங்கால தலைமுறைகளில் தாம் அதன் விளைவு தெரியும். இப்போது வயது வந்தோருள் பத்தில் ஒரு பகுதியினரே உணர்ந்து செயல் திறத்துடன் பண்பாட்டு வாழ்வில் ஈடுபடுகின்றனர். அவர்கள் கற்கும் கல்வி தாம் கற்ற அறிவைப் பிறருக்கு வழங்கவும் எல்லாவற்றையம் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளவும் மட்டும் பயன்படுவது இதற்கு ஒரு காரணமாகும். 18 வயதில் ஒரு பையனோ பெண்ணோ அரங்குகள், இசை நிகழ்ச்சிகள், நூலகங்கள், பொருட்காட்சி மனைகள் ஆகியவை பற்றித் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அறிந்திராதிருப்பது வருந்தத் தக்கதாகும்.

சிலர் தமது விடுமுறை, ஊதியம் பெறும் விடுமுறை நாட்கள், விளையாட்டுகள், போட்டிகள், தொலைக்காட்சி இவற்றுடன் மனநிறைவடைகின்றனர். வேலை செய்ய விரும்பாதவர்களையும் அரசு ஆதரிக்கிறது. சில மாணவர்கள், படிப்பை இடையில் நிறுத்துபவர்கள், ஹிப்பிகள், பீட்னிக்குகள் பொருளீட்டும் போராட்டத்தைத் தொடர விரும்புவதில்லை.

அதற்கு நேர்மாறாக சிலர் நுகர்வுப் பொருட்களைப் பெறுவதற்காக மெய் வருந்தி உழைக்கின்றனர்.

பொதுநல சமூகத்தின் இந்த அறைகூவலை எவ்வாறு ஏற்பது? 14 முதல் 18 வயதுவரை வேலை செய்யத் தொடங்கியவர்களுள் 70 சதவீதம் பேர் வேறு எந்த வாழ்க்கை வழியையும் தெரிந்து கொள்ளவில்லையென சில ஆய்வுகள் காண்பித்துள்ளன. அவர்களுக்குப் பள்ளியின் உள்ளும் புறமும் நன்கு திட்டமிடப்பெற்ற கல்வி வசதிகள் தேவை. இல்லையெனில் பண்பாட்டைப் பொதுமக்களிடம் பரப்புவது அரிது.

ஃபிரான்ஸ் வான் மெஷலன்
டச்சு பண்பாட்டுத்துறை அமைச்சர்

கொலம்பியா

கொலம்பிய குடியரசின் வங்கியை ''உயிருள்ள வங்கி'' என்பர். அதன் உதவியினால்தான் பொகோட்டாவிலுள்ள பொருட்காட்சி மனை தோன்றியது. அதில் கொலம்பிய வரலாற்றிற்கு முற்பட்ட தங்கப்பொருள்கள் உள்ளன. அது தொல்பொருளாய்வாளரின் பொன்னுலகாகவும், நாணயக் குவையாகவும் சிப்பாகுய்ரா சுரங்கங்களில் ''உப்பு பேராலய''மாகவும், இளைஞருக்கும் கலைஞருக்கும் நடுநிலையமாகவும் விளங்குகிறது.

ஜோஸ் மானுவல் ரிவாஸ்-சகோனி
பொகோட்டாவிலுள்ள
'கேரோ இ கியூர்வோ'வின் இயக்குநர்

ஜப்பான்

ஜப்பானியரிடையே பரவியுள்ள இடைநிலைக்கலை எனப் படக் கூடிய கலைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இவை தேநீர் சடங்கு, பூ அலங்காரம், ''டங்கா'', ''ஹய்கூ'' எனப்படும் சிறு கவிதைகள் எழுதுதல் போன்று உயர்நிலைக் கலைக்கும் பொதுமக்கள் களியாட்டங்களுக்கும் இடைப்பட்ட கலைகளாகும். எவ்வாறு நாகரிக நயத்துடன் தேநீர் குடித்தல், வீடுகளில் பூ அலங்காரம் செய்து மகிழ்தல், கவிதை எழுதுதல் போன்றவற்றை 2 கோடி பேர் கற்று வருகின்றனர்.

இரு வெவ்வேறு வகையான ஐரோப்பிய, ஜப்பானிய கலைகளும் பண்பாடுகளும் ஜப்பானில் வண்டியின் இரு சக்கரங்கள் போல் கருதப்படுகின்றன. அவை வாழ்க்கைக்குப் பல்சுவை அளிக்கின்றன.

கெஞ்சி அடாச்சி
அமைச்சர், இத்தாலியில்
ஜப்பானியத் தூதரகம்

யூகோஸ்லாவியா

யூகோஸ்லாவியாவில் இரு எழுத்து முறைகளும், மூன்று மதங்களும், ஐந்து நாட்டுப் பிரிவுகளும், ஆறு குடியரசுகளும் பல நாட்டினங்களும் உள்ளன.

உக்காசின் மிக்குனுவிக்
கல்வி, பண்பாட்டுக் கூட்டாட்சி
அவைத் தலைவர்

இந்தியா

தற்கால உலகில் பண்பாடு வாழவேண்டுமானால் பரந்த அடிப்படையில் அமைக்கப் பெறவேண்டும். பொது மக்களைப் பற்றி எண்ணும்போது இளைஞர்களை நாம் மறந்து

விடலாகாது. அரசு அவர்களின் தேவைகளுக்கேற்ப போதிய வாய்ப்பளிப்பதில்லை. பண்பாட்டுப் பசி அல்லது பண்பாட்டு அறிவின்மை இன்றைய இளைஞரின் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம்.

இந்தியாவில் நாம் பண்பாட்டு வளர்ச்சியை கலைகளுக்கு, குறிப்பாக இலக்கியம், நடனம் அல்லது சிற்பம் போன்ற கலைகளுக்குச் சமமாகக் கருதுவதில்லை. பண்பாட்டின் மூலமாக தனிமனிதனின் உள்ளத்தில் பண்புத் தரங்களை நிறுவ முடியுமென நம்புகிறோம். இதுவே மரபான பண்பாடுகள், சிறப்பாக இந்தியப் பண்பாடு தரும் செய்தியாகும். வாழ்வின் இறுதி நோக்கம் எல்லா வசதிகளையும் பெறுவதன்று, ஆன்ம வளர்ச்சி பெறும் வாய்ப்புகளை அறிந்து கொள்வதே எனும் இக்கருத்து பற்றி இந்திய வரலாற்றில் என்றுமே ஐயப்பாடு எழுந்ததில்லை.

ஆன்மாவும் உடலும் ஒருங்கிணைந்து வளர்ச்சியுறுவதையே இந்திய மரபு வலியுறுத்துகிறது. அத்தகைய மனிதன் உலகில் பிரிவை ஏற்படுத்துவதில்லை, உலகும் அவனது ஒருங்கிணைவைக் கலைப்பதில்லை என பகவத் கீதை பகர்கின்றது.

டி. ஆர். ஜெயராமன்
கல்வி, இளைஞர் பணி அமைச்சின்
கூட்டுச் செயலாளர்

நெதர்லாந்து

கட்டாயக் கல்வியையும் ஊதியம் அளிக்கப்படும் விடுமுறையையும் போலவே பொதுநலப் பாதுகாப்பும் முன்னேற்றத்தின் முக்கிய அறிகுறியாகும். இதுபோன்று பண்பாட்டுத் துறையிலும் நிகழ்ந்தாலன்றி தற்கால வளர்ச்சி பயனற்றுப்போகும். ஆர்ஃபியுஸ் எனும் கவிஞன் யூரிடிசின் ஊழை மாற்ற பாதாளம் சென்றதுபோல், அரசாங்கமும் தனது செல்வாக்கின் வலிமையைப் பயன்படுத்த வேண்டுமா என்றால் 'இல்லை' என்றே பதில் கூறவேண்டும்.

செய்தித் தொடர்புக் கருவிகளினால் நன்மையும் தீமையும் விளைகின்றன. இரண்டையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். மிகுதியான பேர்களிடம் மிகுதியான படைப்பாற்றலை நாம் வளர்க்கவேண்டும். இஃது அரசாங்கத்தின் பொறுப்பு. இவ்வாறு வளர்க்கவில்லையெனில் மக்கள் தாம் கேட்டதையும் பார்ப்பதையும் அப்படியே ஏற்றுக் கொள்வர். அப்போது அவர்கள் இந்தப் பண்பாட்டை, பொதிந்து சீட்டு ஒட்டப்பெற்ற மருந்துப் பொருளைப்போல் ஏற்பர்.

பொருளாதார வளம் குன்றிய நாடுகளைவிட தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளில் படைப்பாற்றல் சுரக்கும் ஊற்றுகள் குறைவு. அவை வறண்ட இடங்களில் அவற்றைப் புதுப்பிக்க வேண்டும். இதற்கு புதிய வகை அமைப்பாளர் தேவை. அவர் கல்வியாளராகவோ, உளநிலை ஆய்வு வல்லுநராகவோ படைத்துறை அலுவலராகவோ இருக்கக் கூடாது. அவர் சேர்ந்து விளையாடுபவராகவும் வழிகாட்டியாகவும் இருத்தல் வேண்டும்: பொருளாதார வளர்ச்சியில் எத்துணை வெற்றி கண்டபோதிலும், கலையும் பண்பாட்டு நடவடிக்கைகளும் தமக்கு அப்பாற்பட்டவை எனக் கருதும் மக்களிடம் அக்கருத்தை அகற்றுவது அவரது கல்விப் பணியின் ஒரு பகுதியாகும்,

மார்கா கிளாம்ப்
பண்பாட்டுத்துறை அமைச்சர்

சுவிட்ஸர்லாந்து

நான்கு மொழிகளும் மூன்று பண்பாடுகளும் நிலவும் சுவிட்ஸர்லாந்து தனது வெவ்வேறு மொழிகளும் மதங்களும் பண்பாடுகளும் ஒருங்கிணைந்து ஒன்றையொன்று வளப்படுத்த வேண்டுமென நம்புகிறது. இப்பண்பாடுகள் நம்மை மூன்று அண்மை நாடுகளுடன் இணைக்கின்றன. இதனால் நாம் அப்பண்பாடுகளில் பங்கு பெறுகிறோம். ஆயினும் நமது பண்பாட்டுத் தன்னுரிமையை இழந்துவிடுவதில்லை.

வில்லி ஸ்பூலர்
சுவிஸ் கூட்டாட்சியின் முன்னாள் தலைவர்

பல்கேரியா

ஆழமற்ற மாற்றங்களின் சிறப்பு நிலை நிற்பதில்லை. ஒருபோதும் மக்கள் அவற்றை விரும்பி ஏற்பதில்லை, பல்கேரியாவில் பண்பாட்டை மக்களிடையே பரப்பும் முயற்சி அதை எளிமையாக்கும் முயற்சியாக ஒருபோதும் கருதப்படவில்லை. ஏனெனில் அது கலையின் உள்ளார்ந்த பண்பை அழித்து விடும்.

பாவல் மேட்டெவ்
பண்பாட்டு 'கலைக் குழு'வின் தலைவர்

தமிழில்: வள்ளுவன் கிளாரன்சு



இப்படம் ஆஃப்ரிக்க இசை, பாடல்களின் ஆற்றலையும் உயிர்த்துடிப்பையும் காட்டுகிறது. ஆஃப்ரிக்கர் பாடலிலும் நடனத்திலும் இசையிலும் தமது பண்டைக்கால கலை மரபுகளையும் பண்புகளையும் பேணி வருகின்றனர்.

Photo © Richard Frieman, Paris

ஆஃப்ரிக்காவின் சுதந்திரமும் பண்பாட்டு விடுதலையும்

ஜேம்ஸ் என்கூகி

''பண்பாடு'' என்பது, பொதுவாக, எல்லாச் சூழ்நிலையோடும் இசைந்து வாழ்வதற்கு இணைந்து முயலும் மக்களால் வகுக்கப் பெறும் ஒரு வாழ்க்கை முறையே ஆகும். மக்களின் கலையியல், அறிவியல், சமயங்களும் சடங்குகளும் கொண்ட சமுதாய அமைப்புக்கள், இவை அனைத்தும் அடங்கியதே அப்பண்பாடு. காலமெல்லாம், ஆக்க முறையில் மக்கள் முயன்று முன்னேறும் பொழுது உருவாகும் அகப்புறச் சீர்மைகள் அம் மக்களின் சமுதாயத்திற்குத் தனி நீர்மையை அளிக்கின்றன. அவை மக்களின் ஆடல்கள் பாடல்களாக, சித்திரங்கள், சிற்பங்களாக, மரபுவழி நம்பிக்கைகளாக மாண்பேறிய சடங்குகளாக மலருகின்றன.

பல்லாண்டுகளாக, கலை இயலின் பலதிறப்பட்ட தொழில்களே 'பண்பாடு' என்ற சொல்லின் பொருளுக்குச் சின்னங்களாக விளங்குகின்றன. இத்தொழில்களை அடிப்படையாக வைத்துத் தான் பண்பாடு என்று நாம் பேசுகிறோம். ஆனால் இவை மக்களின் வாழ்க்கை முறையில் முகிழ்ப்பவை. எனவே, காலப் போக்கிலே மாற்றமும் திருத்தமும் வளர்ச்சியும் பெறும் வாழ்க்கை முறையோடு மாறுபவை என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். புதிய கலைகள் அல்லது புதுப்பித்த கலைகள் இவற்றின் மூலமாக வாழ்க்கையின் புதிய கூறுகளைத் தெளிவுறுத்துவதோ வெளியிடுவதோ எவ்வாறு என்பதை நாம் இன்று காண வேண்டும்.

வெள்ளையர்கள் வெல்வதற்கு முந்திய ஆஃப்ரிக்கா, குடியேற்ற ஆதிக்கத்தால், அடக்கப்பட்ட ஆஃப்ரிக்கா தன் மலர்ச்சிபெற முயலும் இன்றைய ஆஃப்ரிக்கா என்ற மூன்று வளர்நிலைகளில் ஆஃப்ரிக்காவின் பண்பாட்டு வரலாற்றினை நாம் காணுகிறோம். வளர்ச்சியின் பல நிலைகளில், நாட்டுக்கு உள்ளும் வெளியும் தோன்றிய நெருக்கடியால் பண்பாட்டுத் தேவைகளும் நோக்கும் மாறுதலடைந்தன என்ற உண்மையை இது புலப்படுத்தும்.

தனித்தனியாக இணைந்துள்ள பல இன மக்கள் அன்று இருந்தனர்; ஆனால், இன்று, அரசியல் நிலவியல் இவற்றின் பரந்த எல்லைகளில் அடங்கும் நாடுகளாக அமைவதற்கு அவர்கள் முயலுகின்றனர். பழங்குடி, நாடு, பரந்த ஆஃப்ரிக்கா, மூன்றாவது உலகம் என்ற முரண்பட்ட வேட்கைகளால் தோன்றும் தெளிவற்ற புதிய எல்லைகளுக்குள் பண்பாட்டின் இன்றைய பங்கு பற்றி நாம் ஆய்தல் வேண்டும்.

ஆஃப்ரிக்கப் பண்பாடு என்பது மாறுபாடற்ற பொருள் போலவும், அதை முந்தைய பாழடைவுகளில் இருந்து மீட்டுத் தற்கால நிலைக்குக் கொண்டு வந்து, அந்நியரின் சிக்குப் பாதையில் சென்று திக்குத் தெரியாத காட்டில் தவித்து, முன்னோர்களின் நல்லுணவுக்காகப் பசியும் தாகமும் கொண்டு நிற்கும் ஆஃப்ரிக்க மக்களுக்கு உணவாகக் கொடுக்க வேண்டிய பொருள் போலவும் நாம் அடிக்கடி பேசுகிறோம். உயிருள்ள பண்பாடு எதுவும் மாறாமல் என்றும் இருப்பதில்லை. புறச்சூழ்நிலைகளை அடக்குவதெற்கென மனித இனம் இணைந்து போராடுவதன் விளைவாகச் சமுதாயச் சூழ்நிலை உண்டாகிறது. புறச்சூழ்நிலையின் மாறுதல், சரியாகக் கூறுவதெனில், போராட்டத் தன்மையின் மாறுதல், சமுதாய அமைப்புக்களை மாற்றுகிறது. அதனால், வாழ்க்கை முறையும் சிந்தனையும் மாறுகின்ன. அந்தப் புதிய வாழ்க்கை முறையும், சிந்தனையையும் பொதுச் சூழ்நிலையையும் அமைப்புக்களையும் பாதிக்கின்றன. இவ்வாறு ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுகிறது.

வாணிபம், குடிப்பெயர்ச்சி இதனால் மக்களின் பொருளாதாரத்திலோ குடியிருப்பிடத்திலோ பெருத்த மாறுதல் ஏற்படும்பொழுது, புதிய சூழ்நிலைக்கு ஏற்ப மக்கள் தங்களை அமைத்துக் கொள்கின்றனர். அவர்களின் குறிக்கோள்களும் சீர்மைகளும் மாறுதலடையக்கூடியதாகின்றன. சஹாராப் பாலைவனத்தைத் தாண்டிய வாலிபத்தால், ஆஃப்ரிக்கச் சமுதாயத்தைக் குறிப்பிடத்தக்கவாறு பாதித்த புதிய குறிக்கோள்களும் தொழில் நுட்ப உத்திகளும் தோன்றின என்பதை நாம் அறிவோம். நைல் நதியின் வழியே மக்களின் தெற்கு நோக்கிய புடைப் பெயர்ச்சியால், ஆடு மாடு மேய்த்த சில கூட்டத்தினர் உழவர்களாக மாறினர். அதனால் புதிய வாழ்க்கை முறையும் சீர்மையமைப்பும் தேவையாயின.

நம் நாட்டை வென்றோர்களின் கற்பனைக்கும் கதைக்கும் மாறாக, பேரரசுகள் தோன்றி மறைந்து கொண்டிருந்த கொந்தளிப்பு நிலையில் ஆஃப்ரிக்கா என்றும் இருந்து வந்தது. எனவே ஆஃப்ரிக்காவில் மரபுக்கட்டுகளும் பண்பாடுகளும் நிலையாகவோ ஒரு சீராகவோ இருந்ததில்லை. ஆஃப்ரிக்கச் சீர்மைகள், நாகரிகங்கள் என்று நாம் பேசுவதற்கேற்ற பரந்த உறவுக்கூறுகள் காணப்பட்டாலும், மக்களில் பலவகைகள் இருந்தது போலவே நாகரிகங்களிலும் பல வகைகள் இருந்தன.

இதை நினைவிற்கொண்டு, மரபார்ந்த ஆஃப்ரிக்காவின் கலையார்ந்த செயற்பாடுகளை நாம் எவ்வாறு நோக்க வேண்டுமெனச் சிந்தித்தலே முறையாகும். எம். பார்டஸ். இ.இ. எவேன்ஸ் ப்ரிட்ச்சர்டு இவர்கள் எழுதிய ''ஆஃப்ரிக்க அரசியல் முறைகள்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள இரு வகைச் சமுதாயங்களையும் நாம் வேறு வேறாகக் காண வேண்டும்.

''மத்திய இணைப்புள்ள ஆள்வை, நிர்வாக இயந்திரம், நீதி நிறுவனங்கள் சுருக்கமாக அரசாங்கம் இவற்றையுடைய சமுதாயங்களைக் கொண்டது ஒரு தொகுதி. இதில், அதிகார ஆள்வைப்பகிர்வுக்குத் தக்கபடி செல்வம் சிறப்புரிமை, மதிப்புநிலைப் பிரிவுகள் அமைந்துள்ளன. மத்திய இணைப்புள்ள ஆள்வை, நிர்வாக இயந்திரம், அமைக்கப்பட்ட நீதி நிறுவனங்கள், சுருக்கமாக அரசாங்கம், இவை இல்லாத சமுதாயங்களைக் கொண்டது வேறொரு தொகுதி. இதில், உயர்படி, மதிப்புநிலை அல்லது செல்வம் இவற்றையொட்டிய தெளிவான பிரிவுகள் இல்லை.''

எடுத்துக் காட்டாக, நைஜீரியாவைச் சேர்ந்த யோருபாவும் உகாண்டாவைச் சேர்ந்த பகாண்டாவும் முதல் தொகுதியிலுள்ளவை. தனித்தனித்துறைச் செயலாறுகள் அமைந்த தெரிந்த வரையறையுள்ள படியமைப்பு அங்கு உண்டு. ஆண், பெண் புரோகிதர்களுக்கும்,

---

கென்யாவைச் சேர்ந்த **ஜேம்ஸ் என்கூகி** கிழக்கு ஆஃப்ரிக்காவின் முக்கிய பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். ஆஃப்ரிக்க பண்பாடு, மரபுகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவர் கென்யாவில் நெய்ரோபி பல்கலைக் கழகத்தின் முன்னாள் ஆங்கில இலக்கியப் பேராசிரியர் ஆவார்.

அரசியல் பதவியாளர்களுக்கும் உழவர்களிடம் எஞ்சியது உணவாகக் கிடைத்தது. மக்களின் தெய்வங்களுக்கான கோவில்களையும், மேலோர் அவையிலிருந்த சிற்பிகள் கலைஞர்களையும் அது வளர்த்தது. நைஜீரியாவின் இபோவும் கெனியாவின் அகிகுயூவும் மற்றத் தொகுதியைச் சேர்ந்தவை. இங்கிருந்த சமத்துவ அரசியலமைப்பில் செயலாறுகள் தனித்தனித் துறைகளாக மேற்சொன்ன அளவு பிரிவதற்கு இடமில்லை. அரசியல் பதவியாளர்களுக்குப் பொருளாதாரச் சிறப்புரிமைகள் இருந்ததில்லை. தமது ஓய்வு நேரத்தில் களிப்பூட்டவும் தமது உயர்வை மேலும் மிகுதியாக்கிக் கொள்ளவுமெனத் தனிச் சிறப்பான திறனுள்ளோர், தம்மைப் பின்பற்றுவோர் இவர்களுக்கு ஊதியம் கொடுத்து அமர்த்திக் கொள்ளுவதற்கு வசதியளிக்கும் வகையில் சமுதாயச் செல்வத்தின் மீதும் போர்க்கொள்ளை மீதும் அவர்களுக்கு உரிமை இருக்கவில்லை.

அகிகுயு மக்களினத்தில் உலோகத் தொழிலாளர் மிகச் சிலரே கைத்தொழிலை நம்பி வாழ்ந்தனர். தங்கள் பொருள்களைக் கொடுத்து உணவும், உடையும் பெற்றனர். மற்றப்படி, வேளாண்குடி மகனும் இசை பயிலுவான், சடங்குமுறை நடனம் ஆடுவான். வீட்டிலமர்ந்து கதையும் கவிதையும் கூறுவான். போர்க் காலத்தில் வீரனுமாவான்.

எனினும், இந்த இரு வகைச் சமுதாயத்திலும் கலை என்பது தொழில் முறையாகவே இருந்தது. இன்றைய ஐரோப்பாவில் உள்ளதுபோல் மக்களின் சமூகத் தேவை, சமயத் தேவை, புறத் தேவை இவற்றிலிருந்து தனிப்பட்டு வேருக அது இருந்ததில்லை. ''ஆஃப்ரிக்கப் புராணம்'' என்ற நூலில் ஜியாப்ரே பேரிண்டர் என்பார் ஆஃப்ரிக்கக் கலையைப் பற்றிப் பொருத்தமாகக் கூறுகிருர்:

''வெப்ப மண்டல ஆஃப்ரிக்காக் கண்டம் முழுவதிலும் ஆஃப்ரிக்கக் கலை ஒன்றே எழுத்துருவில் இருந்தது. எனவே வாழ்க்கைக் கூறுகள் பலவற்றையும் அது விளக்கியது. வாழ்வோடு இயைந்த தனிப்பட்ட, சமுதாயச் சடங்குகளுக்கு ஆன்மீகப் பண்பும் பயனும் ஏற்றுவதற்கென அக்கலை சமய வாழ்வில் பயன்பட்டது. இவ்வாறு, மனிதனுக்கு அழகும் ஆற்றுமையும் அளிக்கும் புனித இலக்கியமாக ஆஃப்ரிக்கக் கலை திகழ்ந்தது.''

மக்களின் சூழ்நிலைப் போராட்டம், தனி மனிதனின் ஆசைகள் ஆர்வங்கள், இவற்ருேடு இயைந்த பகுதியாகவே ஆடலும் பாடலும் இசையும் இலங்கின. சீன் அல்லது தேம்ஸ் நதிக்கரையில் இருந்தவாறு உயர்ந்த கோவில்களையும் உன்னதப் பூசாரிகளையும் கொண்ட மரபுநெறியாக என்றும் எந்த ஆஃப்ரிக்கச் சமுதாயத்திலும் கலை இருந்ததில்லை. இன்றைய ஐரோப்பாவில் உள்ள கலைஞன் தனித்த ஒருவனுகவே தன்னைக் காணுகிருன்; அவனது கற்பனை காட்டும் விதிகளுக்கு மட்டுமே அடங்கி தனித்ததோர் பண்பாட்டைப் பேணுகிருன். ஜேம்ஸ் ஜாய்ஸ் எழுதிய ''இளைஞனுக ஒரு கலைஞனின் சித்திரம்'' என்ற நூலில் வரும் வீரனின் நிலை இதுதான்:

''நான் எதைச் செய்வேன், எதைச் செய்யமாட்டேன் என்பதை உங்களுக்குக் கூறுகிறேன். எனக்கு ஒன்றில் நம்பிக்கை இல்லையெனில், அது தாயகம்



Photo de Decker-Unesco

பேச்சின் பெருமை



Photo © Hoa-Qui, Paris

ஆஃப்ரிக்காவில் எங்கும் தத்துவமும் அறநெறியும் பொதிந்த கதைகளும் கவிதைகளும் பழமொழிகளும் பேச்சு வழக்கிலேயே தலைமுறை தலைமுறையாக உலவி வருகின்றன. இம்மரபான பேச்சு இலக்கியத்தில் ஊறிய இக்கால ஆஃப்ரிக்க எழுத்தாளர்கள் நகைச்சுவை, உணர்ச்சி நயம், சொல்வளம் கலந்த ஒரு தனி ஆஃப்ரிக்க எழுத்து நடையை வளர்த்துள்ளனர். அண்மையில் யுனெஸ்கோ இப்பண்டைய பேச்சு மரபுகளின் எழுத்துப் படிகளைத் திரட்டி வெளியிட்டதுமல்லாமல், பேச்சுகளிலிருந்து திரட்டப்பெற்ற ஆஃப்ரிக்க கருத்துகளை 1971-72இல் 3 நூல்களாக வெளியிடவும் இருக்கின்றது. இடப்புறம்: செனகாலில் கிராம முதியவர் தமது சமுதாயத்தின் கல்விப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறார். வலப்புறம்: கினியில் கிராமத் தலைவர்கள் கூட்டம். கீழேயுள்ள படங்களில் சாடில் கிராம அவை ''விவாத மரத்''தினடியில் (இடப்புறம்) கூடுகிறது. இளைஞர்கள் 'அறிவு மரத்'தினடியில் வகுப்புகளில் படிக்கின்றனர்.



Photo © Hoa-Qui Paris



Photo Leon Herschtritt © Rapho, Paris

பண்பாடற்ற மக்கள் – அழிப்பதற்கரிய கற்பனை

என்றோ தந்தை நாடு என்றோ திருக்கோயில் என்றோ அழைக்கப்பட்டாலும் அதற்குப் பணி செய்யமாட்டேன். வாழும் வகையில் அல்லது கலையுருவில் எனது எண்ணங்களை இயன்ற அளவு சுதந்திரத்துடன் முழுமையாக வெளியிட முயலுவேன். அடக்கம், நாட்டை விடுதல், சூழ்ச்சித்திறன் இவையே என்னைக் காக்கும் கருவிகளாவன.''

இத்தகைய கலையே மனப்பண்பாட்டினை வளர்க்கிறது. உலகத்தின் சீரிய இலக்கியங்கள், சிந்தனைகள் இவற்றிலிருந்து இனிமையும் ஒளியும் பெற முயலுமாறு ஆங்கில நாட்டு நடுத்தர மக்களுக்கு அறிவுறுத்தினார், மாத்யூ ஆர்னால்டு. அது இத்தகைய பண்பாடுதான். அதற்குப்பின், பண்பட்ட மனிதன் பிறரையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு குறைவில்லா நிறைவு நோக்கிச் செல்ல வேண்டும்; தொடர்ந்து மக்கள் கூட்டத்தை அவ்வாறு முன்னேறச் செய்ய வேண்டும் என்கிறார், ஆர்னால்டு. தனி மனிதனின் அறிவியக்கமே பண்பாடாகும் என்பது ஆர்னால்டின் கொள்கை.

நமது பண்பாடு சமுதாயத்தோடு இணைவது. இதனால், அது சமுதாயத்தை ஒருங்கிணைக்க உதவுகிறது. ''ஆஃப்ரிக்காவின் உள்ளம்'' என்ற நூலில் டபிள்யு. இ. ஆபிரஹாம்ஸ் என்பவர் பண்பாட்டின் இணைப்பியல்பு பற்றிக் கூறியுள்ளார். அது மரபுவழிச் சமுதாயப் பண்பாடுகளுக்குப் பொருந்துவதாகும்:

''கூட்டுறவையும் சகிப்புணர்வையும் வளர்க்கும் கருவியாகப் பண்பாடு உள்ளது. அதன் தன்னியக்கம் தடைப்படாத அளவுக்கு அதன் வெற்றியும் அமைவதாகும். அதைப் பற்றி நாம் உரையாடலாம்; உரையாடலால் அது உரம் பெறுகிறது; ஆனால் உரையாடலால் உதிக்கும் முடிவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அப்பண்பாடே உணர்த்துகிறது. பொறுமையான நம்பிக்கைகள், செயல்கள், சீர்மைகள் உள்ள மக்களை ஒன்றுபடுத்தி, அரசின் ஆட்சிவரைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையில் ஒழுங்கமைவை ஏற்படுத்துகிறது, பண்பாடு. பொதுமையான மனப்பான்மை, சீர்மைகள் இவற்றின் அடிப்படையில் சமுதாயத்தை அது இணைக்கிறது. பொதுமையான இலக்கினை வகுப்பதற்கான அடிப்படையை ஆக்கி, அதனை அடைவதற்கேற்ற கூட்டுறவையும் அது வளர்க்கிறது.''

ஜோமோ கென்யாட்டா எழுதிய ''கெனியா மலையை நோக்கி'' என்னும் மகத்தான புத்தகம் பண்பாட்டின் ஒருங்கிணைப்புச் செயலாற்றினைக் காட்டும் உயிர் ஓவியமாகும்; அதைப் படிப்பதே துடிப்புள்ள உள்ளுணர்வு கொண்ட உலகத்தை உடனடியாகக் காண்பதாகும். ஆஃப்ரிக்கா காட்டுமிராண்டியானது, இருண்டது என்ற சமயப் பிரச்சார நிந்தனைக்கு அதிகாரபூர்வமான மறுப்பு அது. எல்லாவற்றிற்கும் மேலாக, இப்புத்தகம் பண்பாட்டின் அரசியல், பொருளாதார அடிப்படையை நன்கு சித்திரிக்கிறது. அகிக்யூ வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் விவாதித்த பின்னர், ஒரு நாட்டு மக்கள் தங்களைக் கண்டுணர்ந்து கொள்வதில் பண்பாடு தலையாய பணி ஆற்றுகிறது என்று

Photo © Progress Publishers, Moscow

காங்கோ ஜனநாயக் குடியரசிலுள்ள மாங்பெட்டுவைச் சேர்ந்த ஆஃப்ரிக்க கைவினைஞன் செய்த நீர்க்குவளை. இதன் முடி ஒப்பனை பண்டைய எகிப்திய அரசிகளின் ஒப்பனையை நினைவூட்டுகிறது. மஞ்சள் நிறமுள்ள இக் களிமண் குவளை 32 செ.மீ. உயரமுள்ளது. இப்போது இஃது எஸ்டோனியாவிலுள்ள டார்ட்டு இனப்பரப்பு ஆய்வியல் பொருட்காட்சி மனையிலுள்ளது.

ஆணித்தரமாக எடுத்துரைப்பதுடன், கென்யாட்டா தமது புத்தகத்தை முடித்துள்ளார்:—

‘‘வாழ்க்கையில் இக்கூறுகள் அனைத்தும் சேர்ந்தே சமுதாயப் பண்பாடாக அமைகின்றன. வழிவழியாகத் தனக்கு வரும் பண்பாட்டினாலேயே மனிதன் மதிப்பும் மற்ற வளமும் பெறுகிறான். அதுவே அவனுக்கு மனச்சீர்மைகளையும் ஒழுக்கச் சீர்மைகளையும் கற்பிக்கிறது. விடுதலைக்காகப் போராடுவது பொருளுடைத்து என்பதை மனிதன் உணரும் படிச் செய்வதும் அதுவே’’ என்று கென்யாட்டா எழுதியுள்ளார்.

இந்த மனச்சீர்மைகளையும் ஒழுக்கச் சீர்மைகளையும் அழித்தொழிப்பதிலேயே ஐரோப்பிய குடியேற்ற ஆதிக்கவாதிகள் ப்ராஸ்பெரோ வழியினர் போல் கருத்துள்ளவர்களாயிருந்தனர். ஷேக்ஸ்பியர் எழுதிய ‘‘புயல்’’ (டெம்பஸ்ட்) என்னும் நாடகத்தில் வரும் ப்ராஸ்பெரோ-கலிபன் கதையில், குடியேற்ற ஆதிக்க மனநிலையும் நடைமுறையும் கூறப்பட்டுள்ளன. உலகெங்கணும் குடியேற்ற ஆதிக்க முறை செயலுக்கு வருமுன்பே, இவர் இதைச் சித்தரித்துள்ளார். ப்ராஸ்பெரோ-கலிபன் உரையாடலை இங்கு எடுத்துக்கூறுவது பயனுள்ளதாகும்:

‘‘இத்தீவில் வந்திருந்த புதிதில் நீங்கள்
எவ்வாறெல் லாம்என்னை அடித்தீர் ஐயா;
எத்தனையோ விதமென்னை வதைத்தீர் வாட்டி
இருந்தாலும் சுவைபானம் தருவீர் அன்றோ!
பகலொளியைப் பரப்புகின்ற பெருவிளக்கை—
இராக்குளிரும் சிறுவிளக்கை, என்ன பேரால்
புகல்வதெனக் கற்பித்தீர் ஞாயிற் றோடு
திங்களையும் புரிந்தேன்; பின் உமைநேசித்தேன்!
புதுப்புனல்போல் நீரூற்றை; தீவின் உப்பங்
கழிகளொடு, வயல்வெளியை; பொட்டல் காட்டை—
இதுபோலும் இத்தீவின் தன்மையெல்லாங்
காட்டினனே—அதற்கெனக்கு இன்னும் வேண்டும்!
உங்கள்பால் எனதன்னை சைக்கோராக்சின்
வசியச்சொல் வீழாதோ, உங்கள் நெஞ்சில்
பொங்காதோ பெருங்கருணை? உம்பால் வௌவால்,
தேனீயும் தேரையும் புகன்றி டாவோ?
எனைத்தவிர்த்து வேறெவரும் இல்லை இங்கே
என்பதனால் எனைவாட்டு வீரோ ஐயா?
நினைத்திடுவீர் முன்னம்யான் மன்னனிங்கே;
நீள்தீவும் என்னுடைத்தே—மறந்திட்டீரோ?
தனித்திங்கே இன்னலுறும் கலிபன் என்னைப்
பன்றியைப்போல் இம்முரட்டுப் பாறை தன்னில்
பிணித்தடைத்துத் தீவினின்றே எனைப்பிரித்தே
பெருங்கொடுமை செய்கின்றீர்—ஆமோ ஐயா?’’

இந்த நாடகத்திலிருந்து பல பொருள்களும் மனப்போக்குகளும் வெளிப்படுகின்றன. அந்தத் தீவுக்குப் புதியவனாக வந்த ப்ராஸ்பெரோ ஆதியில் வந்த பாம்புபோல் மென்குரலில் பேசுகிறான். முதலில் கலிபனுடன் நட்பு பூண்டு பழகுகிறான்; புகழாரம் சூட்டுகிறான். நேரத்தில் தீவின் பல இரகசியங்களையும் அவனிடமிருந்து தெரிந்து கொள்ளுகிறான். அவனைப் பொறுத்தவரை, கலிபனுக்குப் பண்பாடோ, பழம்பெருமையோ இல்லை. அவன் தனது மொழியைக் கலிபனுக்குக் கற்பிக்கிறான்.

கலிபன் நின்று நிதானிக்குமுன் ப்ராஸ்பெரோ கலிபனின் நிலத்தைப் பறித்து, தனித்த அரசாங்கம் அமைத்து, கலிபனை அடிமைத் தொழிலாளி ஆக்கி விடுகிறான். கலிபனின் அடிமையாக இருந்த ஏரியலை விடுவித்துத் தனக்கு அடிமையாக்கி விடுகிறான். ஏரியல் ப்ராஸ்பெரோவின் உண்மை ஊழியனாகவும் ஒற்றனாகவும் இருந்தால்தான், அவன் முடிவில் விடுதலை பெறுவான்.

ப்ராஸ்பெரோ போன்றே ஐரோப்பிய குடியேற்ற ஆதிக்கவாதிகள் பண்பாட்டின் ஒப்பற்ற முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். தங்கள் மரபிலும் பழமையிலும் நம்பிக்கை கொண்டவர்களால் ஏற்படும் ஆபத்தை இவர்கள் உணர்ந்து அஞ்சினர். இல்லாவிட்டால், உண்மையான கடவுளரும் பண்பாடும் பழம்பெருமையும் ஆஃப்ரிக்கருக்கு இல்லை என்று, தம் படைபலத்தையும், சமய ஆர்வத்தையும் அறிவுத்திறனையும் வலுவாகப் பயன்படுத்தி ஐரோப்பியர்கள் ஏன் மறுக்க வேண்டும்? சமயப் பரப்பாளர்கள் பழைய சடங்குகளையும் ஆடல்களையும் செதுக்கிய சிற்பங்களையும் அவை காமவுணர்வைக் காட்டுவதாகக் கூறிப் பழித்தனர். ஐரோப்பாவின் சிறந்த அறிஞர்களில் சிலரும் இந்தப் பகட்டான பொய்மைக்குத் துணை நின்றனர்.

ஐரோப்பியர் ஆஃப்ரிக்கரின் வாழ்வு முறைக்கு அமைந்த அடித்தளத்தையும் அரசியல், பொருளாதார நிறுவனங்களையும் திட்டமிட்டு ஒழித்துக் கட்டினர். ப்ராஸ்பெரோவைப் பின்பற்றிய இச்செயலே மாபெரும் விளைவுகளுக்குக் காரணமாகியது. சமத்துவச் சமுதாயங்களில் முன்னர் நடுவண ஆட்சியத் தலைமை இருந்ததில்லை; இப்போது ஐரோப்பியர் அதை ஏற்படுத்தினர். வேறு வகையில் நடுவண அமைப்பிருந்த இடங்களில் அதன் அடிப்படைகளை அகற்றினர். முன்னரோ, அரசர் மக்களிடமிருந்தே அரசியல் அதிகாரத்தைப் பெற்றார்; குடிமக்கள் மீது அவருக்கு உரிமைகள் இருந்தது போன்றே அவர்கள்பால் கடமைகளும் இருந்தன.

குடியேற்ற நாடுகளான கிழக்கு, மத்திய ஆப்பிரிக்காவில் நாட்டினை முழுமையாகச் சுரண்டுவதற்கு வசதியாக இருந்த நிலையிலும், மேற்கு ஆஃப்ரிக்காவில் மூலப்பொருள்களைப் பெறுவதற்கும் சந்தைகளைப் பிடித்துக் கொள்வதற்கும் வசதியாக இருந்த நிலையிலும் இந்த நிறுவனங்கள் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டன. ஆதிக்கமான பணப்பொருளாதார அமைப்பைப் புகுத்தியும், புதிய கல்வி, சமய முறைகளைத் தோற்றுவித்தும், ஆஃப்ரிக்கர்களுக்குப் பொருளாதார, அரசியல் அதிகாரங்களை மறுத்தும், ஆஃப்ரிக்கர்களை ஒன்று சேர்த்த இணைப்புகளை ஐரோப்பியர் அறுத்தனர்; அதனால் ஆஃப்ரிக்கர்கள் சிதறுண்டனர்.

குடியேற்ற ஆதிக்கத்தின் விளைவு, ஆஃப்ரிக்கரில் சிலர் நாடு கொண்ட ஐரோப்பியரின் மொழியைப் பேசவும் நடையுடை பாவனைகளைக் கொள்ளவும் தலைப்பட்டதாகும். இவர்கள்தான் சமயப் பரப்பாளர்களின் குரலுக்குச் செவி சாய்த்தனர். அவர்களைப் போலவே பரமண்டலத்தில் உள்ள பிதாவை வானோக்கித் தொழத் தலைப்பட்டனர். இவர்கள் தம் மக்களின் பழங் கடவுளரையும் பழஞ்சடங்குகளையும் வேண்டுமென்றே வெறுத்து ஒதுக்கினர்.

குடியேற்ற ஆதிக்க அமைப்பில் இயல்பாக ஒரு சிலருக்கே இடமுண்டு. எனவே, பெரும்பாலான மக்கள் நிலமிழந்தனர். இவர்கள் பண்ணையாட்கள் அல்லது நகரக் கூலியாட்கள் ஆயினர்.

மேனிலையுற்ற ஒரு சிலர் மக்களிலிருந்து விலகிப் பிரிந்தனர். பழமையை இகழ்ந்து ஒதுக்கினர். நைஜீரிய எழுத்தாளராகிய சினுவா ஆச்பீ இக்கூட்டத்தினரை மனத்திலே கொண்டு ஏக்கத்துடன் கூறுகிறார்.

‘‘எக்காரணம் பற்றி இனத் தாழ்மையை நாம் ஒப்புக் கொண்டிருந்தாலும், அது மிக மோசமான செயல் என்றே நான் கருதுகிறேன்’’

பெரும்பான்மையினராயிருந்த மறுபகுதியினர் ஆஃப்ரிக்கப் பழமையை மறக்கவில்லை; ஆஃப்ரிக்க மண்ணுடன் அவர்களுக்கிருந்த தொடர்பு அறவில்லை. வளைந்து கொடுக்கும் ஆஃப்ரிக்கப் பண்பாடு தாக்குதலையும் பிரச்சாரத்தையும் ஓரளவு எதிர்த்து நின்று நிலைத்தது. ப்ராஸ்பெரோ கண்டறிந்ததைப் போலவே, குடியேற்ற ஆதிக்கம் மனித உள்ளுணர்வை முழுவதுமாக நசுக்கிவிட முடியவில்லை.

இந்த விடுதலைப் போராட்டத்திலே நாட்டுப்புறத்திலுள்ள குடியானவர்களும் நகர்ப்புறத்திலுள்ள பாட்டாளிகளும் எதிரியை எதிர்த்துப் போராட வலிமையளிக்கும்படித் தங்களுடைய பண்டைய தெய்வங்களை நயந்து வேண்டினர். போராட்டத்தின் புதிய தேவைகளுக்கு ஈடு கொடுக்க மரபுவழி அமைந்த பாட்டினையும் கூத்தினையும் இனிமையான இசையினையும் ஏற்றவாறு பயன்படுத்திக் கொண்டனர்.

அறிவாளிகளும் பெருங்குடிமக்களும் இடைநிலை மக்களும் நாடு கொண்டவர்களால் தாங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைக் கண்டனர். வெள்ளையரின் சமுதாயத்தில் ஒத்த நிலையிலுள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாது. இனத்தின் பெயரால் இவர்களுடைய மனிதத்தன்மை சில சமயம் மறுக்கப்பட்டு, இவர்கள் மேல்நிலையிலிருந்து பாமர மக்களின் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் போன்று ஆயினர். இதனால், இவர்கள் தீவிரமான பழங்கால நாட்டத்துடன் பண்டைய பெருமையை எய்த முயன்றனர்.

நீக்ரோ எழுத்தாளர்கள்—கலைஞர்களின் முதல் மாநாடு பாரிஸில் கூடிய போது, செனகலைச் சேர்ந்த அலியோன்

இன அடிப்படையில் எழும் கொடிய கோபுரம்

தியாப் பின்வருமாறு அறிவித்தார்: ஆஃப்ரிக்க மக்கள் பண்பாடில்லாதவர்கள் என்ற பொய்ப் பழி இருக்கிறது. ஆஃப்ரிக்க நாடுகளை அடிமைப்படுத்தியவர்கள் இக்கட்டுக்கதையைக் கிளப்பிவிட்டாலும், பண்பாடின்றிச் சமுதாயத்திலே வாழ முடியும் என்ற கூற்றைப் பண்பாட்டிலும் ஆன்மீகத்திலும் தேர்ந்தவர்கள் பல தலைமுறைகளாக ஒப்புக்கொண்டது வியப்புக்குரியது".

இப்பொய்ப் பழியை ஆஃப்ரிக்கா பற்றி ஐரோப்பியர் எழுதிய புத்தகங்களில், அதிலும் புதினங்களில் விரவியிருப்பதை அறிந்த ஆஃப்ரிக்க எழுத்தாளர் தாம் எழுதிய புத்தகங்களில், மற்றெந்தப் பண்பாட்டையும் போலவே ஆப்ஃரிக்கர்களுக்கும் பண்பாடு உண்டு என்று பதில் கூறினர். நீக்ரோ இயக்கம் அரசியல் பணியாற்றிய பண்பாட்டு அமைப்பாகும். அரசியல் உரிமை பறிக்கப்பட்ட ஒரு சமுதாயம் தனது பண்டைய பெருமையை மீண்டும் உருவாக்குவதோ, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொள்வதோ எளிதல்ல என்பது பொதுவாக உணரப்பட்டது.

இந்த உணர்வு பொதுப்படவும், சில சமயம் தெளிவின்றியும் இருந்தது. பெரும்பாலான ஆஃப்ரிக்க அறிஞர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள் இவர்களிடை "அரசியலில் தன்னுரிமை பெற வேண்டுமானால், பண்பாட்டுத் தன்னுரிமை வேண்டும்" என்ற நம்பிக்கை திடமாக இருந்தது. பண்பாடு என்பது கூத்துக்களிலும், காட்டுத் தப்பட்டைகளிலும், நாட்டுப் பழக்கவழக்கங்களிலும் மட்டுமே இருப்பதாக அவர்கள் கருதுவதால், இவற்றுக்குப் புத்துயிர் அளிப்பதன் அவசியத்தை வலியுறுத்திவிட்டால் போதுமென அவர்கள் நினைக்கின்றனர்.

ஆனால், அரசியலைவிட பண்பாடு முக்கியமானது என்று நினைப்பது தவறு. மக்களின் ஆக்கும் ஆற்றலும் கற்பனையும் உண்மையில் மலர வேண்டுமானால், பண்பாட்டு உரிமை வேண்டுமானால் அரசியல், பொருளாதார உரிமை இன்றியமையாதன. கட்டுறுத்தும் சமுதாய அமைப்பை உடைத்தெறிந்து புதியதொன்றைப் படைக்கும் வேலையில் மக்கள் முனைந்து ஈடுபடும்போதுதான், மக்கள் தங்களைத் தாங்களே உணர்ந்து கொள்ளத் தலைப்படுகின்றனர்; அவர்கள் மறுபிறப்பு உறுகின்றனர்.

இன்று, பெரும்பாலான ஆஃப்ரிக்க நாடுகள் விடுதலை அடைந்த பின்னர் தனித்தனித் தேசியப் பண்பாட்டினை வளர்க்கும் பொறுப்பேற்றுள்ளன. சில நாடுகள் இதற்கென அமைப்புக்களையும் நிறுவியுள்ளன. என்றாலும், மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மிகச் சிலவே.

பண்பாடு குறித்துக் கொண்டுள்ள தவறான மனப்பான்மை ஓரளவு இதற்குக் காரணமாகும். சிலர், நேர்மையான சிலர், பண்பாட்டினை பொருத்தமற்ற சில வழிமரபுகளோடு குழப்புகின்றனர்; மரபுவழி வந்த அமைப்புக்களையும் பண்பாட்டினையும் அப்படியே அலுங்காது நவீன ஆஃப்ரிக்காவில் பொருத்துவது இயலாததாகும். இன்றைய நம்பிக்கைகளிலிருந்து, அதிலும், ஏழைமையுற்ற வேளாண்குடிகள், நிலத்தோடு தொடர்பு விட்டுப்போன நகர்ப்புற பாட்டாளிகள் இவர்களின் நம்பிக்கைகளிலிருந்து உயிர்த்தெழுவதே சாரமுள்ள பண்பாடாகும்.

குடியேற்ற ஆதிக்கமுள்ள பொருளாதார-சமுதாய நிறுவனங்களை அப்படியே வைத்துக் கொண்டு, எவ்வாற்றானும் அவற்றை ஆஃப்ரிக்கப் பண்பாட்டுடன் ஒட்டமைக்க முடியும் என்றும் சிலர் இன்னும் நம்புகின்றனர். குடியேற்ற ஆதிக்க நிறுவனங்கள் ஆதிக்க மனப்பான்மையைத்தான் தோற்றுவிக்க முடியும், என்பதை நாம் கண்டோம். ஆஃப்ரிக்க இடைநிலை வகுப்பினர் பலரும், பெரும்பான்மையான வேளாண்குடி - பாட்டாளி மக்களின் புரட்சிகரமான கோரிக்கைகளை அடக்குவதில் உதவி புரிந்து, குடியேற்ற ஆதிக்க வெள்ளையரின் அதிகார அமைப்போடு நம்பிக்கை உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டுள்ளது தான் இடர்ப்பாடாக உள்ளது.

விடுதலைக்காகப் போரிடும்போது, படித்த ஆஃப்ரிக்க மக்களில் பெரும்பாலோர் தங்களுக்கு வேண்டியதை மட்டுமே விரும்பினர். ஆதிக்க முறைச் சமூகத்தில் தங்கள் நிலை உயர்ந்த போதும், அம்முறையிலுள்ள நிறவேற்றுமைக் கொள்கையால் தாங்கள் அடைய முடியாதிருந்த தேவைகளை அடையவேண்டும் என்ற நோக்கிலேயே இவர்கள் விடுதலைப் போராட்டத்தைக் கண்டனர். தங்களைப் போன்ற தகுதியுடைய வெள்ளையர்களைப்போல் அதே உடைகள், காலணிகள் அணியவும் அதே ஊதியம் பெறவும், அதே வகை மாடமாளிகையில் வாழவும் இவர்கள் விழைந்தார்கள்.

இத்தேவைகளுக்குத் தடையாயிருந்த நிறப்பாகுபாடு நாட்டு விடுதலைக்குப்பின் மறைந்தது. முன்பு தங்களை அடக்கியாண்ட வெள்ளையர்களைப் போலவே தாங்களும் வாழ்க்கை முறையை மேற்கொள்ள வேண்டும் என்ற வெறி இவர்களுக்கேற்பட்டது. தோலை வெளுப்பாக்குதல், முடியின் சுருளை நீக்குதல், பொருத்தமற்ற வரவேற்பறை விருந்தளிப்புகள், பெரிய சொத்துக்கள், நாட்டுப்புற மாளிகைகள், 'மெர்சிடைல்' 'பெண்ட்லி' கார்கள் இவற்றைவைத்துக் கொள்ளுதல் இவையே இன்றைய நிலையாகும். என்றாலும், இவர்களில் சிலர், புரியாத பழமையைப் போற்றிப் புகழ்வதில் உறுதியாக உள்ளனர்.

உண்மையான நாட்டுப் பண்பாட்டினை எய்த வேண்டுமானால், நாம் நமது நிலைமையை உணர்ந்து கொள்ள வேண்டும். அஃதாவது, நமது சமுதாய், பொருளாதார அமைப்புக்களை நன்கு சீர்தூக்கிப்பார்த்து, அவை நமது உண்மைத் தேவைகளை நிறைவு செய்யவும், மக்களின் ஆற்றலை வெளிப்படுத்தவும் ஏற்றவைதாமா என்பதைக் காண வேண்டும். நிறுவன வடிவமைப்புப் பெறாத எந்தக் குறிக்கோளும், கனவும் பயனற்றவையே.

இந்த ஏற்புணர்வே டான்ஸானியாவில் வெளியிடப்பட்ட அருஷா அறிவிப்பின் மையக் கருத்தாகும். பெரும்பாலான ஆஃப்ரிக்க நாடுகள் பெயர் அளவுக்குத் தன்னாட்சிமை நாடுகள் என்றாலும், அவை ஓரளவு குடியேற்ற ஆதிக்க நிலையிலேயே இருக்கின்றன என்பதை டான்ஸானிய மக்கள் அறிந்துள்ளனர். என்பதை இந்த அறிவிப்பு காட்டுகிறது. டான்ஸானியா நாட்டுத் தலைவரான ஜூலியன் நைரீ கூறுகிறார். "நாம் எவ்வளவோ அடக்கப்பட்டுள்ளோம். நாம் எவ்வளவோ சுரண்டப்பட்டுள்ளோம். நாம் எவ்வளவோ தாழ்த்தப்பட்டுள்ளோம். நாம் அடக்கப்பட்டதற்கும், சுரண்டப்பட்டதற்கும், தாழ்த்தப்பட்டதற்கும் நமது வலிமையின்மையே காரணமாகும். நமக்கு இப்போது புரட்சி வேண்டும். நாம் மீண்டும் சுரண்டப்படாதிருக்க, அடக்கப்படாதிருக்க, இகழப்படாதிருக்க வேண்டுமெனில், நம் வலிமையின்மை நீங்குவதற்குத் தக்கதொரு புரட்சி வேண்டும்."

பொருளார்ந்த ஆஃப்ரிக்கா உருப்பெற வேண்டுமானால், சமூக நிறுவனங்கள் முழுதுமாகச் சீரமைக்கப்பட வேண்டும்; என்றாலும், புதிய மனப்போக்குகளும் புதிய கலை வடிவங்களும் தோன்றுவதை ஊக்குவிக்க நாம் செயல் முறைக்கேற்ற திட்டவட்டமான கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

இந்தப் பணியில் கல்வியின் பங்கு உயிர்நாடியானது. குடியேற்ற ஆதிக்கக் கல்வி அமைப்பிலே அடிமைத்தனம், தன்-வெறுப்பு, ஒருவர் மீது ஒருவர் அவநம்பிக்கை இவை வளர்ந்தன. எந்தப் பண்பாட்டிலும் வேரூன்றாத மக்களையே இக்கல்வி முறை உருவாக்கியது. பள்ளிகள், ஆசிரியர்கள், படிப்பு வசதிகள் ஒதுக்கீட்டில் பெரும்பாலும் நிறவேற்றுமையே அடிப்படையாக அமைந்தது.

எடுத்துக்காட்டாக, கிழக்கு, மத்திய, தெற்கு ஆஃப்ரிக்கா எங்கணும், ஐரோப்பியர்களுக்கும் ஆசியர்களுக்கும் ஆஃப்ரிக்கர்களுக்கும் தனித்தனிப் பள்ளிகள், ஒதுங்கிடங்கள் இருந்தன. சமுதாயம் என்பது இனங்களைக் கொண்ட கோபுர அமைப்பாகவே இருந்தது. சிறுபான்மையினரான ஐரோப்பியர் உச்சியிலும், ஆசியர் நடுவிலும், ஆஃப்ரிக்கர் அடிமட்டத்திலும் இருந்தனர். கல்வி முறையும் இந்த ஏற்றத்தாழ்வைக் காட்டியது. இது அடிமை மனப்போக்கையும், ஐரோப்பாவின் சாதனைகளை வழிபடும் வியப்புணர்வையும் ஊக்கி வளர்த்தது. ஐரோப்பாதான் அண்டத்தின் மையம்; ஐரோப்பாவால் ஆப்பிரிக்கா கண்டுபிடிக்கப் பட்டது. ஐரோப்பாவின் விரிவுதான் ஆஃப்ரிக்கா, எனவே, ஆங்கிலோ ஸாக்ஸன் இனந்தான் மனித குலத்துக்கே உண்மையான மூதாதை என்ற நினைப்பில் அந்த இனத்தின் எழுச்சியை வரலாற்றிலே படித்தனர். புவியியலில் ஐரோப்பியப் பாறைகளைப் பற்றி முதலிலும், பின்னால் ஆஃப்ரிக்காவைப் பற்றியும் கற்க வேண்டியிருந்தது. இன்று இனவெறியின் மிக வெளிப்படையான கூறுகள் நமது கல்வி முறையிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. எனினும், அடிமைத்தன மனப்பான்மையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட, நாட்டுப்புறக் குடியானவர்களையும் நகர்ப்புற பாட்டாளிகளையும் இழிவாக நோக்குகிற கல்வி முறை அடிப்படை மாற்றம் பெறாமல் இன்னமும் இருக்கிறது. நமது பள்ளிகளிலும்,

பல்கலைக் கழகங்களிலும் இன்றும் ஐரோப்பாவே நடுநாயகமாகத் திகழ்கிறது. ஆள்வதற்கென்றே பிறந்தவர்களை உருவாக்குவதுதான் முக்கியமாகி விட்டது.

அண்மையில்தான் நைரோபி பல்கலைக் கழகக் கல்லூரியில் மிக முக்கியமான விவாதம் எழுந்தது. இலக்கிய ஆராய்ச்சியில் இணைந்துள்ள ஆங்கில மொழித் துறை, விடுதலை பெற்ற ஆஃப்ரிக்க நாட்டின் இதயப்பகுதியில் பிரிட்டிஷ் இலக்கியத்தைத் தொடர்ந்து கற்பித்து வந்ததைச் சில விரிவுரையாளர்கள் எதிர்த்ததால் எழுந்தது, அந்த விவாதம். மக்கள் வரலாற்றில் இடையீடற்ற ஒரே பண்பாட்டினையே கற்று ஆராய வேண்டும் என்ற அடிப்படையில், பிறரை இழித்துக் காணும் ஆதிக்க மனப்பான்மை நியாயம் எனக் கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் மரபுகளும் தற்கால மேற்கத்திய நாடுகளின் தோற்றமுமே நமது மெய்யுணர்விற்கும் மரபாக்கத்திற்கும் ஆணிவேராகும் என்ற உறுதியான எண்ணமே இதற்குக் காரணமாகும். ஆனால், இதை எதிர்த்த விரிவுரையாளர்களின் வாதாட்டம் வருமாறு: ‘‘வரலாற்றில் இடையீடற்ற ஒரே பண்பாட்டினைப் பயிலுவது தேவையெனில், ஆஃப்ரிக்கப் பண்பாட்டையே பயிலலாமே? ஆஃப்ரிக்க இலக்கியத்தை மையமாக வைத்து, மற்ற பண்பாடுகளின் தொடர்புகளை நாம் ஏன் காணக் கூடாது?’’

இந்த நோக்குடன், ஆங்கிலத் துறையை ஒழித்துவிட்டு அந்த இடத்தில் ஆஃப்ரிக்க இலக்கியத்தையும் மொழிகளையும் அமைக்க வேண்டுமென அவர்கள் கோரினர். இந்த இலக்கியத்துறை, தற்கால ஆஃப்ரிக்க இலக்கியம், ஆஃப்ரிக்க—அமெரிக்க, கரீபியின் இலக்கியம், ஐரோப்பிய இலக்கிய மரபு பற்றித் தேர்ந்தெடுத்த பாடமுறை ஆகியவற்றை ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் பயிலுவிக்கும். ஆஃப்ரிக்க இலக்கிய வாய்மொழி மரபினைப் பற்றிய பயிற்சியே இத்துறையின் முக்கிய பணியாகும்.

ஆஃப்ரிக்கப் பள்ளிகளிலும் பல்கலைக் கழங்களிலும் வாய்மொழி மரபின் முக்கியத்துவத்தை எவ்வளவு வலியுறுத்தினுலும் அது மிகையாது. நமது மனத்தைச் சீர்படுத்தி, நமது அடிப்படைகளைத் தெரிந்துகொண்டு, ஆஃப்ரிக்க எழுத்தாளர்கள் ஐரோப்பிய இலக்கியப் போக்கிலிருந்து மாறி புதிய பாணிகளைக் கையாளுவதற்கு இத்தகைய பயிற்சி மிக முக்கியமாகும்.

நைஜீரியாவின் அபியோலா ஐரில் கூறியுள்ளது போல்: —ஐரோப்பிய மொழிகளிலுள்ள ஆப்பிரிக்க இலக்கியம், அம்மொழியின் தாயக இலக்கியங்களிலிருந்து உள்ளுறைப் பொருளில் மட்டுமன்றி ஓரளவு வடிவிலும் வேறுபட்டதாகும் என்பதை நாம் காணலாம். நமது எழுத்தாளர்கள் ஆஃப்ரிக்கக் கருத்தமைவுகளையும் பொருள்களையும் நாட்டு மரபுக் கூறுகளையும் வைத்து மட்டுமின்றி, வாழையடி வாழையென வருகின்ற ஆஃப்ரிக்க இலக்கியத்தின் கூறுகளிலிருந்து கிடைக்கும் நடையொளிர் புதுமைகளையும் கையாண்டு கருத்தோவியங்களைப் படைத்ததாலேயே இதன் தனித் தன்மை பிறக்கிறது.’’

Photo Bruno Suter © Editions Hermann, Paris

இம் மர உருவம் எக்ஸ்போ 70இல் ஐவரி கோஸ்ட் காட்சியரங்கின் வாயிலில் இருந்தது. இவ்வரங்கில் யானைத் தந்தம் போன்ற மூன்று உருளைக் கட்டட அமைப்புகளிருந்தன. 50 இலட்சம் மக்கள் வாழும் இந்நாட்டின் தொழில் வாழ்க்கையையும் பண்பாட்டு மரபுகளையும் காட்டும் நிழற் படங்களும் சித்திரங்களும் இக்கட்டடங்களின் சுவர்களில் காணப்பட்டன.

பறிப்பதிலன்றிக் கூட்டுறவில் அமையும் சமூகம்

இவையனைத்தையும் செய்வதெனில், நாட்டின் மரபுக்கொள்கைகளை முழுமையாகத் திரட்டித் தொகுத்தமைக்க இயலுமாறு நிதி இருக்க வேண்டும். இந்நிலையில், பன்னாட்டுக் குழுமங்கள் நிதி அளிப்பதன் மூலம் உண்மையிலே உதவி புரியக்கூடும்.

நம் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு ஆஃப்ரிக்க மொழிகளைக் கற்பித்தலும் கற்றலும் முக்கியமாவன. குடியேற்ற ஆதிக்க முறை எதுவும் என்ன செய்கின்றது என்பதை நாம் ஏற்கனவே கண்டோம்: ஆட்சிக்குட்பட்ட இனங்களின் மீது தன் மொழியைத் திணிக்கிறது; பிறகு, அந்த இனங்களின் தாய்நில மொழிகளைத் தாழ்வுபடுத்துகிறது. அவ்வாறு செய்து, தம் மொழியைக் கற்றுக்கொள்வதைப் பெருமைக்குரிய சின்னமாக அவர்கள் ஆக்கி விடுகின்றனர்; அதனைக் கற்போர், பெரும்பான்மை வேளாண்குடியினரையும் அவர்தம் திருந்தா மொழிகளையும் இழிவாகக் கருதுகின்றனர். புதிதாகக்கற்றுக் கொண்ட மொழியின் சிந்தனை முறையையும் சீர்மைகளையும் ஏற்று, தமது தாய்மொழியின் சீர்மை முறையினின்றும் விலகி விடுகின்றனர்.

காலமெல்லாம் கனிந்து உருவான சீர்மைகளைக் கொண்டதே ஒரு மக்களின் மொழியாகும். நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பேசும் ஆஃப்ரிக்க மொழிகளைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்காதது மிக்க அறிவின்மையானது என்று எனக்குத் தோன்றுகிறது. தேசிய மொழியொன்றை உருவாக்குவது நமக்குத் தேவையானதுதான்; ஆனால், அவ்வாறு உருவாக்குவது வட்டார மொழிகளை அழித்தன்று. நம் சொந்த மொழிகளைக் கற்பது நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதற்கு அவசியமானது என்பது மேன்மேலும் உணரப்பட்டு வருகிறது. ஆஃப்ரிக்க மொழிகளை அதிகமாகக் கற்றால், ஆஃப்ரிக்கர்கள் தம் தாய்மொழிகளிலேயே எழுத விழைவார்கள். அதன் மூலம் ஆக்கப் புனைவுகளுக்குப் புது வழிகள் தோன்றும்.

ஆஃப்ரிக்கப் பல்கலைக் கழகங்களில் நாடக, இசைப்பள்ளிகளும் அமைக்கப்படல் வேண்டும்; ஆஃப்ரிக்க இசை, நாடகம் ஆகியவற்றை வெறும் கல்வி முறை அளவில் பயிலுவிப்பதாக மட்டுமன்றி புதிய வடிவுகள்—வயணங்களைப் புனைந்து ஆயும் வழிகாட்டு நிறுவனங்களாக அப்பள்ளிகள் அமைதல் வேண்டும். பல்கலைக் கழகத்தில் உள்ள பல்லியங்களும், நாடக மன்றங்களும் வெளிப்போந்து நாட்டு-நகர்ப்புறங்களுக்குச் செல்ல வேண்டும். கருத்துக்கள், கலைத்திறன்கள் இவைகளைப் பரிமாற்றிக்கொள்ளும் வகையில் வட்டாரங்களில் உள்ள இசை, நாடகக் குழுக்கள் பல்கலைக் கழகத்திற்கு வர வேண்டும். இதற்கென, பயணஞ்செய்யும் நாடக மன்றங்களை ஊக்குவிக்கலாம். மேக்கரீர் கல்லூரி மாணவர்கள் இத்தகைய மன்றம் ஒன்றை முன்றாண்டுகளாக நடத்திக்கொண்டு வருகின்றனர். அவர்கள் உள்ளடங்கியுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் நடித்து வருகின்றனர்; இதனால், உகாண்டாவின் நாட்டுப்புற மக்களிடம் நாடகக்கலை வேட்கை எழுந்துள்ளது. இது தேசிய அடிப்படையில், சீரான முறையில் அமைக்கப்படலாம். மக்கள் மரபு ஆராய்ச்சியில் உள்ளது போலவே, ஆஃப்ரிக்க இசைப்பதிவுகளையும், நாட்டின் பல்வேறு இசைக்கருவிகளையும் கொண்ட ஒரு நிலையம் தேவையாகும்.

பல ஆஃப்ரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் பள்ளிகளிலும், சிற்பம், ஓவியம், உருவரைக்கலை ஆகியவற்றை மாணவர் கற்பதற்கான நுண்கலைத்துறைகள் இருக்கின்றன. அத்துறைகள் பலவற்றிலும் கலையை அணுகுவது வெறும் கல்வி அடிப்படையில் அமைந்துள்ளது. அவர்களின் படைப்புக்கள் கருத்தியலளவிலேயே உள்ளன. அவற்றின் உரிப்பொருளும் செயற்பாங்கும் கருத்தியலான மேற்கத்தியப் போக்கில் இருப்பதாலும், விலைகள் மிக அதிகமாக உள்ளதாலும் பயணிகள் மட்டுமே அவற்றை வாங்க முடிகிறது. பெரும்பாலும் நம் கலைஞர்கள் இந்த ஆதரவாளர்களையும் மனத்திற்கொண்டே ஓவியந் தீட்டவும், சிற்பம் செதுக்கவும் செய்கின்றனர். இந்நிலை மாறியே தீர வேண்டும். முதலாவதாக, கலைப்பள்ளியொன்றில் சேருவற்குக் கல்வித் தகுதிகளையே உரைகல்லாகக் கொள்ளும் முறை நீங்க வேண்டும், அல்லது கிராமத்தில் உள்ள கலைஞர்களும் இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் வகையில் அதை அடியோடு மாற்றியமைக்க வேண்டும். வெறும் கல்வித் தகுதி அடிப்படையில் ஆசிரியர்களைத் தெரிந்தெடுப்பதும் கூடாது.

பிக்காஸோ, ஹென்றி மூர் ஆகியோரின் கருத்தமைவுக்குக் காரணமாயிருந்த ஆஃப்ரிக்கச் சிற்பிகள் மேற்கத்திய கல்வி நிறுவனங்களில் பயிலவில்லை. சமுதாயத்திலே திளைத்த சமயப் பிணைப்பிலே பிறந்த தேவையின் காரணமாக அவர்கள் உருவாயினர். கலை நிலையங்களைக் குறித்து அடிமாற்றமான நோக்கு ஒன்று ஏற்பட்டால், நாடு முழுவதிலும் உள்ள கலைவளத்தையும் கலைத்திறன்களையும் நாம் திரட்டிப் பெற முடியும். மேலும், கிடைக்கக்கூடிய மரபார்ந்த சிற்பங்கள், கைவினைப் பொருள்கள் இவற்றைத் திரட்டுவதற்கும், நம் காலத்துக் கலைச்சிறப்புக் கொண்ட பொருள்கள் வேறொரு நாட்டிற்குப் போகாமல் தடுப்பதற்கும் நாம் தேசியக் கலைக்கூடங்களை அமைத்தல் வேண்டும். இதனால், தற்போது பயணிகளின் ஆதரவையே நம்பியிருக்கும் நிலையிலிருந்து நம் கலைஞர்களை மீட்கலாம்.

ஒரு நாட்டு மக்கள் தங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதற்குக் கல்வி நிறுவனங்கள் எத்தனை முக்கியமானவை என்பது மேற்கண்ட கருத்துக்களால் புலப்படும். நமக்குள்ள வசதிகளை அடிமாற்றம் செய்வது கலைகளுக்கு மட்டுமே என்றில்லாமல், அறிவியல், மருத்துவ இயல், புவியியல் முதலிய ஒவ்வொரு கல்வித்துறையிலும் அதைப் புகுத்தி ஆஃப்ரிக்காவைச் சிறப்பிடமாகச் செய்தல் வேண்டும். பல்கலைக் கழகங்களும் நம் பள்ளிகளும் நாட்டுப்புறப் பகுதிகளுக்கும் விரிவடைதல் வேண்டும்; நம்மை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் வேளாண்குடியினரின் ஆக்கப் போராட்டத்தில் நாம் முழு ஈடுபாடு கொள்ள வேண்டும். அப்போது, நாடும்' பல்கலைக் கழகங்களும் புத்துயிர் பெறும்.

இனவாரி நடனங்களுக்குப் புத்துயிரளித்து வளர்க்க வேண்டும் என்பதே ஆஃப்ரிக்க மக்கள் விரும்பியேற்கும் கருத்தாகும். இதற்காகவே உகாண்டாவில் உள்ள **"ஆஃப்ரிக்க இதயத் துடிப்பு"** போன்ற நடனக் கலைகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கு ஆஃப்ரிக்காவில் மேலும் பல கலைக் குழுக்கள் உள்ளன. எனினும், இம்மன்றங்களைப் பற்றி இரு மனப்போக்குகள் உண்டு. ஒன்று, பெரும்பாலும் ஆஃப்ரிக்கப் பண்பாட்டை வெளியுலகிற்கு ஏற்றுமதி செய்வதற்கான சாதனம் இவை என்ற கருத்து. இது, ஆஃப்ரிக்க நடனங்களை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மக்கள் பெருமளவில் விரும்பியேற்கச் செய்வதற்கு உதவியுள்ளபோதிலும், பயணிகளை நம்பியிருக்கும் மனப்பான்மையைத் தான் இது காட்டுகிறது. நடனமும், நம்முடைய பிற கலைப்படைப்புக்களும் முக்கியமாக உள்நாட்டினர் அனுபவிப்பதற்கே உள்ளன. இதனால், கலைஞர்களும், கலைகாணும் அவையினரும் ஒருவரையொருவர் தழுவி வளருகின்றனர். தேசியக் கலைக் குழுக்கள் நாடெங்கணும் சமுதாய நடனங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். உகாண்டாவில் **"ஆப்பிரிக்க இதயத் துடிப்பு"** இப்பயனை விளைத்துள்ளது; அங்கு, நாட்டின் மூலைமுடுக்கிலுள்ள கிராமங்களிலுங்கூட சிறு சிறு நடனக் குழுக்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. மற்றொரு மனப்போக்கு, பண்டைய நடனங்களைத் தற்காலத்துக்கு ஏற்றவாறு புதுப்பிக்கவோ, மாற்றி அமைக்கவோ முயற்சி செய்யாமல் அவற்றை அப்படியே மீண்டும் ஆடி வருவதே நம் பணி எனக் கருதுவதாகும். மற்றெந்தக் கலையையும் போலவே, நடனம் என்பது நாட்டு மக்களின் உற்றுணர்வுகளையும் உவப்புக்களையும் எதிரொளி செய்தல் வேண்டும். இல்லையெனில், அந் நடனங்கள் மிகப் பழம்பாணிப் பொருள்களைத் தேடி வரும் பயணிகளுக்கு ஏற்றதான ஸ்காட்லாந்தின் கிராமிய நடனத்தைப் போன்ற வெறும் வேடிக்கைக் காட்சிகளாகி விடும்.

நாடெங்கணுமுள்ள சிறந்த நாட்டியக்காரர்களிலிருந்து. தேசிய நடனக் குழுக்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். முடிந்த அளவுக்குப்பல்வேறு நடனங்களையும் பயிலும் ஒரு தொழில் முறைக் குழுவாக அது இருப்பது நல்லது. அத்துடன், நடனத்தை இசையுடனும் நாடகத்துடனும் இணைத்து அதனால் விளையும் வாய்ப்புக்களை ஆய்பவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். அதே சமயத்தில் கிராம அல்லது வட்டாரக் குழுக்களையும் நாம் ஊக்குவித்தல் வேண்டும், உண்மையில், தேசியக்குழு தன் வளர்ச்சிக்கான ஊட்டத்தை இந்தக் கிராம மக்களிடமிருந்தே பெறுகின்றது.

முக்கியமான இச்செயலாற்றங்கள் அனைத்தையும் நாம் விழையும் சமுதாயம் எதுவோ அச்சூழலில் வைத்துக் காணவில்லை எனில் அவை பொருளற்றதாகிவிடும். பிற்போக்கு மரபையும் பொருந்தாத பழங்குடி , ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் வகையில் நம் செயலாற்றங்கள் இருத்தல் கூடாது. அன்றிருந்த

(தொடர்ச்சி 34ஆம் பக்கம் பார்க்க)

(17ஆம் பக்கத்தொடர்ச்சி)

பொறுத்தவரை, இந்த வர்த்தக விளம்பரத்தால் அதிகக் கேடு விளையுமா, அரசியல் பிரச்சாரத்தால் அதிகக் கேடு விளையுமா, என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை’’ என்று எக்ளிஸ் பிரபு கூறுகிறார்.

பயனுள்ள கலாச்சாரக் கொள்கைகளை வகுப்பதில் உள்ள சிக்கல்களையும் சோதனைகளையும் எக்ளிஸ் பிரபு உணர்ந்திருந்த அதே நேரத்தில், எதிர்காலத்தில் அவர் நம்பிக்கை இழந்து விடவில்லை. இச் சோதனைகளை உறுதியுடன் சமாளித்தால், வெற்றி காண முடியுமென்று அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

தேசியக் கலாச்சாரங்களை மக்களிடையே பரப்பும்போது, மக்கள் அனைவரிடையும் கல்வியறிவையும் கலை இன்பத்தையும் பெருக்கும் முறையில், அவற்றைப் பரப்ப முடியுமென்று அவர் நம்பினார். நேரடியான அரசாங்க உதவி அளித்தும், தனியார் கலைக்கு ஆதரவு தருவதற்கான வாய்ப்புக்களைப் பெருக்கியும் கலைஞர்க்கு அரசாங்கம் எல்லா உதவிகளும் செய்ய முன்வர வேண்டுமென்று அவர் நம்பினார். உயிருள்ள கலைகளுக்கும் பொதுத் தொடர்புச் சாதனங்களுக்கும் இடையேயுள்ள உறவுகளை விரிவாக ஆராய்ந்து, அவற்றிற்கிடையே ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களைப் பெருக்கும் நேரத்தில், ‘நாளையக் கலாச்சாரத்தின் தரத்தை உயர்த்துவதிலோ, இழிவுபடுத்துவதிலோ, வல்லமை மிக்க சக்திகளாக விளங்குவது, பொதுத் தொடர்புச் சாதனங்கள்தான்,’ என்பதை உணர்ந்திருக்க வேண்டுமென்றும் அவர் நம்பினார்.

மற்றவர்கள் கருத்துக்களையும் அறிந்து மதித்து, ஆக்க பூர்வமான விளக்கம் தர ஆயத்தமாயிருக்கும் அதே நேரத்தில் வரட்டுத் தத்துவ சித்தாந்த மோதல்களைத் தவிர்க்க வேண்டுமென்று மாநாடு நாட்டம் கொண்டிருந்தது வெளிப்படையாயிற்று. செயலில் முனையாமல் சர்ச்சையில் சிக்கி, மாறுபட்ட குழுக்களாகப் பிரிந்து சிதறுமல், பல்வேறு பிரச்சினைகளில் ஒருமித்த நடவடிக்கை எடுப்பதற்கு உறுதுணையான சூழ்நிலை மாநாட்டில் விவாதத்தின் பயனுக உருவாயிற்று.

கலாச்சார ஆர்வம் கொண்ட மனிதன் ஆக்கபூர்வமான ஆர்வம் கொண்டவனுகவும் விளங்குவான் என்பதற்கும், நியாய உணர்வுடன் உருவான ஒத்துழைப்பு உணர்வுடன் மக்கள் கூடிச்செயலாற்றும் புதியதோர் யுகத்திற்கு மாநாடு அடிகோலியது என்பதற்கும், இம்மாநாட்டின் வெற்றி ஓர் அறிகுறி என்று நாம் துணிந்து நம்பிக்கை கொள்ளலாமா? அந்த நம்பிக்கை மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே ஓங்கியிருந்தது என்பது தெளிவாயிற்று. அந்த நம்பிக்கையின் காரணமாக, ஐயப்பாடு கொண்டிருந்த பார்வையாளர் கூடப் புதிய உற்சாகமும் ஆர்வமும் கொள்ள வழி பிறந்தது என்றும் உறுதியாகக் கூறலாம்.

மாநாடு முடிந்த நேரத்தில், பிரதிநிதிகள், ‘உயர்ந்த குறிக்கோள்களில் உறுதி கொண்டும், துணிவான நடவடிக்கை மேற்கொள்ள ஆர்வம் கொண்டும்’ காணப்பட்டனர். சொல்லைச் செயலில் வெளிப்படுத்த அவர்களுக்கிருந்த ஆர்வம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சுமார் 80 தீர்மானங்களில் வெளிப்பட்டது.

அந்த 80 நகல் தீர்மானங்கள், 24 பரிந்துரைகளாக வடித்தெடுக்கப்பட்டது, விவாதத்தின்போது பெருமளவு ஏற்பட்ட கருத்து ஒற்றுமைக்குச் சான்ருக அமைந்தது.

இந்தப் பரிந்துரைகளில் பாதி, யுனெஸ்கோவின் உறுப்பினர் நாடுகளே மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களைச் சுட்டிக் காட்டியது, குறிப்பிடத் தக்கது. கலாச்சாரம் என்பது, வல்லுநரும் சர்வதேச நிறுவனங்களும் மட்டும் மேற்கொள்ளும் கேளிக்கை நிகழ்ச்சி என்றும் அந்நிகழ்ச்சிகளை வெளியிலிருந்து உலகம் வேடிக்கை பார்த்துப் பாராட்டி அல்லது குறை கூறி, வாளாவிருக்க வேண்டியதுதான் என்றும் எண்ணுவது பொருத்தமற்றது என்பதையும், அதற்கு மாருக, அனைவரும் பங்கு கொண்டு, ஒவ்வொருவரும் தாமே செய்து முடிக்க வேண்டியதே கலாச்சாரம் என்பதையும் மாநாடு வலிமையாக வற்புறுத்த விரும்பியது.

யுனெஸ்கோவின் செயலகம் இதில் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பைக் குறைவாக மதிப்பிட்டதாக இதற்குப் பொருளல்ல. சர்வதேச ஒத்துழைப்பை யுனெஸ்கோ ஒன்று திரட்டி ஒருமுகப் படுத்த வேண்டும் என்பதை மாநாடு உறுதியாக வலியுறுத்தியது.

மாநாட்டின் பரிந்துரைகளின் விரிவான பட்டியலை நாம் இங்கு தர வேண்டியதில்லை என்ற போதிலும், அடுத்து சில ஆண்டுகளில் செயலாற்றப் படுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடிய முக்கிய பரிந்துரைகள் சிலவற்றை இங்குக் குறிப்பிட வேண்டும்.

கலாச்சாரக் கொள்கைகளைப்பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள ஒரு நிலையம் நிறுவப்பட வேண்டுமென்றும், அந்த நிலையம் அரசாங்கங்களுடன் மட்டுமல்லாமல், கலைகளில் ஈடுபாடு கொண்ட தனியார் நிறுவனங்களுடனும் சேர்ந்து கூட்டுமுயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும் மாநாடு அழைத்தது. கலாச்சாரப் புள்ளிவிவர உருவகச் சின்னங்களை அமைக்க வேண்டும்; முறையான கல்வி, வாழ்நாள் முழுவதும் தொடரும் கல்வி ஆகியவற்றின் உட்பொருள் பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டும்; புதிய கேள்வி, காட்சிக்கல்வி சாதனங்களின் கலாச்சார விளைவுகள் பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டும்; டெலிவிஷன் போன்ற புதிய பொதுத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தும் அதே நேரத்தில், எல்லாக் கலாச்சாரங்களும் சம உயர்வு கொண்டவை என்பதை மதித்து நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கை போற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், சர்வதேச உடன்பாடுகளை வகுப்பதில் மற்ற ஐக்கிய நாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்; மாநாடு வற்புறுத்திய பரிந்துரைகளில் இவை முக்கியமானவை.

கலாச்சார நடவடிக்கைகளைத் திறமையாக மேற்கொள்ள, ஆலோசகர்கள், இயக்குநர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோர் பெருமளவில் தேவைப்படுவார்கள் என்பதை மாநாடு உணர்ந்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க யுனெஸ்கோ முன்வர வேண்டுமென்று அழைத்தது.

கலாச்சார வளர்ச்சி, ஒரு நாட்டின் பொதுவான வளர்ச்சியோடு இணைந்த ஓரம்சம் என்பதை உணர்ந்து, கலாச்சார வளர்ச்சிக்கும் நாட்டின் பொதுவான வளர்ச்சிக்கும் உள்ள உறவை ஆராய்ந்து கலாச்சார வளர்ச்சிக்கு அனைத்துலக நிதி ஒன்றைத் திரட்டுவதற்கான முயற்சிகளை யுனெஸ்கோ மேற்கொள்ள வேண்டுமென்று மாநாடு அழைத்தது.

இறுதியாக, இந்த மாநாட்டின் வெற்றியால் ஊக்கமடைந்த பிரதிநிதிகள், 1972இல் ஐரோப்பாவிலும், 1973இல் ஆசியாவிலும், 1975இல் ஆஃப்ரிக்காவிலும், தொடர்ச்சியாக மேலும் பல அனைத்து நாட்டு மாநாடுகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், மக்கண்மை இயக்கமும் சமாதானமும் பரவச் செய்வதில் கலாச்சாரம் ஆற்ற வேண்டிய தொண்டு பற்றி ஆராயப் படைப்பாற்றல் பெற்ற கலைஞர்களும் கலாச்சாரத்தில் ஈடுபாடு கொண்டவர்களும் அடங்கிய, அனைத்துலகக் கருத்தரங்கு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்றும், மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆலோசனை கூறினர்.

இப் பரிந்துரைகளைச் செய்தபோது, 1970 முதல் பத்தாண்டுகளில் கலாச்சாரம் மிக முக்கியப் பிரச்சினையாக விளங்கும் என்பதையும், ஏதாவது ஒரு வழியில், அரசாங்கமும் இந்த நடவடிக்கைகளில் பங்கு கொள்வது தவிர்க்க முடியாத பொறுப்பாகி விட்டது என்பதையும், பிரதிநிதிகள் தெளிவாக உணர்ந்து உறுதியாக ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பது புலனுயிற்று.

வெனிஸ் மாநாடு பற்றி யுனெஸ்கோ பொது மாநாட்டிற்குத்தலைமை இயக்குநர் தம் அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, மாநாட்டுப் பிரதிநிதிகள் செய்த பரிந்துரைகளின் முக்கியத்துவத்தை வற்புறுத்தினர். வெனிஸில் செய்யப்பட்ட பரிந்துரைகளில் முக்கியமான சிலவற்றின் மீதாகிலும், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதிசெய்யும் வகையில், 1971ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்களில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்றும் அவர் பரிந்துரைத்தார்.

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் பற்றி உலகுக்கு நினைப்பூட்ட வெனிஸ் மாநாடு முயன்றது. உணவு மட்டுமே மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்ற அடிப்படையில் மனிதன் பல ஆண்டுகளாக வாழ்ந்துவந்து, அந்த உணவைச் சீரணிக்க முடியாமல் இன்னல் அடைந்துள்ளான்.

அறிவியலும், கல்வியும், அருளற்ற சகோதரிகள் என்று சித்தரிப்பது முற்றிலும் நியாயமற்றதாக இருக்கலாம். ஆனல் புறக்கணிககப்பட்ட சிண்டெரெல்லாச் சிறுமியாகக் கலாச்சாரம் நீண்ட காலமாக நடத்தப்பட்டு வந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. தங்கள் அன்பினல் ஆட்கொண்ட சுவீகார அன்னைத் தேவதைகள்போல, வெனிஸ் மாநாட்டுப் பிரதிநிதிகளும் அற்புதங்கள் சிலவற்றைச் சாதிக்க முற்பட்டனர். கந்தலிலிருந்து செல்வ நிலையை அடைவதைச் சித்திரிக்கும் இக்கதைக்கு இனிய முடிவு ஏற்படுமா? கதையில் வந்த இனிய அரசகுமாரனைப்போல், உலக உணர்வு என்ற கதாநாயகன் தனக்குரிய பரிசைக்கோரி எய்தும் துணிவு பெறுவானு என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தமிழில்: கா. திரவியம்

(32ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார அடிப்படைகள் அகற்றப்பட்டு விட்டதால், அவை இன்று பொருத்தமற்றவை, பிற்போக்கானவை. கியூபாவின் புரட்சி இயக்கப் பத்திரிகையாகிய ''மூன்று கண்டங்கள்'' என்னும் இதழுக்கு அளித்த ஒரு பேட்டியில், கினியா, வெர்டேமுனே ஆகிய இடங்களிலுள்ள விடுதலை இயக்கத்தின் தலைவரான திரு. அமில்கர் கேப்ரல், இந்தச் சிக்கலை போர்ச்சுகீசிய குடியேற்றஆதிக்கத்துக்கு எதிரான தம் கொரில்லாப் படைகளைப் பற்றுறுத்தும் அளவில், ஆய்ந்துள்ளார்:—

''குடியேற்ற ஆதிக்கத்தினர் ஆஃப்ரிக்காவுக்கு வந்தபோது பொருளாதார மலர்ச்சியினாலும், ஆஃப்ரிக்க அரங்கில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளாலும் பழங்குடி மரபின் கட்டமைப்பு ஏற்கெனவே சிதைந்துபோன நிலையில் இருந்தது. இன்று, ஆஃப்ரிக்கா பழங்குடியமைப்பு முறையில் உள்ளதாகக் கூற முடியாது. ஆஃப்ரிக்காவின் பழங்குடி மரபு, குறிப்பாக, மக்களின் மனப்பான்மையில் இன்னும் சிறிது எஞ்சி இருப்பினும், பொருளாதாரக் கட்டமைப்பில் அது அற்றுப் போய்விட்டது. மேலும், குடியேற்ற ஆதிக்கத்தின் ஆக்கச் செயல் எதுவும் இருக்குமாயின் அது நாட்டின் சிற்சில பகுதிகளில் எஞ்சியிருந்த பழங்குடி மரபமைப்பின் பெரும் பகுதியை அழித்ததேயாகும்.''

பழங்குடி மரபமைப்பின் வரைகளில் அல்லது தேசிய எல்லைகளில் அடங்காது, அனைத்து ஆப்ரிக்காவையும், மூன்றாவது உலகையும் அளாவி நிற்கும் ஒரு புரட்சிகரமான பண்பாட்டை நாம் உண்டாக்க விழைகிறோம். இந்தத் தேசிய, அனைத்து ஆஃப்ரிக்க, மூன்றாவது உலக உணர்வை ஒரு சமுதாயச் செயல்முறைத் திட்டமாக உருமாற்ற வேண்டும்; அல்லது அதைப் பயனற்று மடியும்படி விட்டு விட வேண்டும்.

இதனை முடிவு செய்து கொண்டு, பிறகு நம் வசமுள்ள வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம், பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், இளைஞர் இயக்கங்கள், உழவர் கூட்டுறவுச் சங்கங்கள், இத்தகைய எல்லா வகை வளங்களையும் அத்தகைய சமுதாயத்தைப் படைத்தமைக்கப் பயன்படுத்தலாம். இவ்வழியிலே, நாம் புதிய வலிமையையும் உள்ளூக்கத்தையும் அடையலாம். சென்ற ஆண்டு டார்-எஸ்-ஸலாம் என்னும் இடத்தில் ஆசிரியர்களுடன் ஜூலியஸ் நேரீர் பேசுகையில், அருஷா அறிக்கையின் புரட்சிகரமான குறிக்கோள்களுக்குஏற்ப, வலிமையைத் தோற்றுவிக்கும் வகையில் அவர்கள் கல்வி புகட்ட வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அத்தகைய நலமார்ந்த ''நெஞ்சுரமுள்ள இளைஞரை'' உருவாக்கக் கூடிய உண்மையான தேசியப் பண்பாடு, இரக்கமின்றிச் சுரண்டல் - பறித்தல் இவற்றின் அடிப்படையிலன்றிக் கூட்டுறவின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தைப் பேணி வளர்க்கும் பண்பாடு, மக்களின் கூட்டுழைப்பில் உதித்த ஒரு பண்பாடு. இத்தகைய பண்பாடுதான் இன்றைய உலகுக்கு உண்மையிலேயே ஆக்கமான, புதுமையான ஒன்றை அளிப்பதற்கு ஏற்றதொரு பண்பாடாகும்.

தமிழில்: சண்முகசுப்பிரமணியம்

யுனெஸ்கோ செய்தியறை

அனைத்துலக அறிவியல் பரிசுகளை யுனெஸ்கோ வழங்குகிறது

தனது பாரிஸ் தலைமையகத்தில் நவம்பர் 12இல் நடத்திய ஓர் இரட்டை விழாவில், அறிவியலுக்கான அனைத்து நாட்டுப் பரிசுகள் இரண்டை யுனெஸ்கோ வழங்கியது. பிராணிகளின் உடற்கூறு மற்றும் நடத்தை இயல் துறைபோய வித்தகரான பேராசிரியர் கோன்ராட் லாரென்ஸ், அத்துறை அறிவியலை வளர்த்ததற்காக, கலிங்கப் பரிசைப் பெற்றார்; ''வளர்ந்து-வரும் நாடு அல்லது பகுதியில் அறிவியலுக்கும் தொழிற்கலை இயலுக்கும் ஆற்றப்படும் மிகச் சிறந்த தொண்டுக்கான'' யுனெஸ்கோவின் மற்றோர் அறிவியல்பரிசு, பிலிப்பைன் சில் லாஸ் பானோசிலுள்ள அனைத்து நாட்டு அரிசி ஆய்வுக் கூடத்திற்கும் மெக்சிகோவிலுள்ள அனைத்து நாட்டு சோளம் மற்றும் கோதுமை அபிவிருத்தி நிலையத்திற்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

பசிப் பிணியுடன் போராடும் உலகிற்குப் பெரும் உறுதுணையாக-அதிக விளைச்சலுள்ள, பிணி மற்றும் பூச்சி தடுப்பு வகை கோதுமையையும் அரிசியையும் அபிவிருத்தி செய்ததன் மூலம் 'பசுமைப் புரட்சியில்' பங்குகொண்டமைக்காக, மேற் சொன்ன இரு நிறுவனங்களும் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

கலிங்கப் பரிசு பெற்ற பேராசிரியர் லாரென்ஸ், சீவிசென்னிலுள்ள மாக்ஸ் ப்ளாங்க் இன்ஸ்டிடியூட்டின் (உடற்கூறு மற்றும் நடத்தை ஆய்வு இயல்) இயக்குநர்; செர்மனிக் கூட்டாட்சியின் பிரதிநிதி; 'சாலமன் மன்னனின் கணையாழி', 'ஆக்கிரமிப்பைப் பற்றி...' போன்ற பிரபலமான நூல்களின் ஆசிரியர்.

மக்கட்தொகைப் பெருக்கத்தின் ஏறுமுகம்

தற்போதைய போக்குகள் நீடித்தால், அடுத்த 36 ஆண்டுகளில், 700 கோடிக்கும் மேலாகும் அளவில், தற்போதைய மக்கட்தொகை இரட்டிப்பாகிவிடும் என்று, நில இயலுக்கான ஐக்கிய நாடுகளின் அண்மை ஆண்டு நூலானது கூறுகிறது. ஆண்டொன்றுக்கு 1·9 விழுக்காடு என்னும் உலக மக்கட்தொகைப் பெருக்க விகிதமானது, மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து 1969-லும் அதே அளவில்தான் இருந்தது. 1969-க்கு, மேற்படி ஆண்டு நூல் தரும் பிற புள்ளி விவரங்கள் வருமாறு: உலக மக்களில் 56% (விழுக்காடு) ஆசியாவிலும், 6·7% சோவியத் யூனியனிலும், 6·3% வடஅமெரிக்காவிலும், 13% ஐரோப்பாவிலும் இருந்தனர். அதிக மக்கட் தொகையுள்ள நாடுகள்: (சீனம் 74 கோடி); இந்தியா (53·7 கோடி).

மனிதச் சூழலின் சிக்கல்கள்

நமது 1970 ஆகஸ்ட்-செப். இதழில், 'மனிதனும் வன்முறையும்' குறித்து, ஐ.நா. தலைமைச் செயலர் ஊதாண்ட் அவர்களின் பெயரில் வெளியான 'மனிதன்—இயற்கையை அழிப்பவன்' என்னும் கட்டுரையானது, அவரது தனிக் கட்டுரையன்று; மாறாக, ஐ.நா. பொருளாதார-சமூக அவைக்கு, 1969 ஜூலையில் வைக்கப்பட்ட அவரது அறிக்கையான 'மனிதச் சூழலின் சிக்கல்கள்' என்பதில் கண்ட கருத்துக்களையே, அக் கட்டுரையாகத் திரட்டித் தரப்பட்டது என்பதை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர 'யுனெஸ்கோ கூரியர்' விழைகின்றது.

புதிதாகக் கற்பவர்களுக்கு என ஓர் அரபு வார ஏடு

புதிதாகக் கற்பவர்கள் எளிதில் படிப்பதற்காக—அவர்களுக்கென்றே சிறப்பாக உருவாக்கப்படும் ஓர் அரபு வார ஏடான 'எல் முர்சித்'தின் முதல் இதழை, 'மகரெப் அராபே பிரசே' எனும் மொராக்கிய செய்தி நிறுவனம் ராபட்டில் வெளியிட்டிருக்கிறது. எழுத்து வழக்கு அரபு மொழியில் வழக்கமாகவே விடுபட்டு விடும், உயிர் எழுத்துப் பேச்சு வழக்கு ஒலிகளைக் காட்டி, கூடுதலாக ஏராளமான அரபியப் பாத்திரங்களை அவ் வார ஏடு ஏவல் கொண்டு வருகிறது. கலாச்சார மற்றும் அறிவியல் தலைப்புக்களிலும் அது கவனஞ் செலுத்தி வருகிறது.

ஒசாகா—70இன் பிம்பங்கள்

800 ஏக்கர் நிலப்பரப்புக்குள் வைத்துக் காட்டப்பட்ட நேற்றைய—இன்றைய—நாளைய உலகின் காட்சிப் பெட்டியான ஜப்பானிலுள்ள ஒசாகாவில் கடந்த ஆண்டில் நடந்த உலகப் பொருட்காட்சியின் வியத்தகு காட்சியை, புருனோ ஸ்டுயர், பீட்டர் நாஃப் ஆகியோர் தாம் எடுத்த குறிப்பிடத்தக்க 500 புகைப் படங்கள் தொகுப்பில் கவர்ந்து தந்துள்ளனர். பாரிசிலுள்ள எடிசன்ஸ் ஹெர்மான்னினால் அத்தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இன சமத்துவத்தின் சின்னம்

''இனவெறி மற்றும் இன ஒதுக்கல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் செயலுக்கான அனைத்து நாட்டு ஆண்டாக'' 1971-க்கு ஐ.நா. பெயரிட்டிருக்கின்றது. நிறவெறி, இன ஒதுக்கல் மற்றும் தள்ளி வைத்தலின் கொடுமைகளைப் புரியவைக்கும் பணியைப் பரப்பிட மேற்கொள்ளப்படும் இவ் வனைத்துநாட்டு இயக்கத்திற்கான சின்னமாக இங்கே காட்டப்பட்ட தோற்றக் குறிப்புப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இனம், நிறம் மற்றும் இன மூலாதார அடிப்படைகளில் எவரையும் ஒதுக்காமல், இனங்களனைத்தையுஞ் சமமாகக் கருதுவதை அச்சின்னம் இயம்புகிறது.

செய்திக் கதிர் . . .

- யுனெஸ்கோவின் செயல்முறை மொழிகளுள் ஒன்றாக—ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய மற்றும் ருஷ்ய மொழிகளுக்குச் சமமான தகுதியை அரபுமொழி பெற இருக்கிறது.
- 5000 கல் நீளமுள்ள ட்ரான்ஸ்-அமேசான் நெடுஞ்சாலைத் திட்டத்திற்கான கருத்துருவை, பிரேசிலின் போக்குவரத்து அமைச்சகம் ஆய்ந்து வருகின்றது.
- யுனெஸ்கோவுக்கான சோவியத் யூனியன் குழுவானது, மூன்று திங்களுக்கொரு முறை வரும் 'புல்லெட்டின்' என்னும் இதழை, ருஷ்ய, ஆங்கில, பிரெஞ்சு மற்றும் ஸ்பானிய மொழிப் பதிப்புக்களுடன் வெளியிடத் துவங்கியிருக்கிறது.

Edited and published by N. D. Sundaravadivelu for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

புதிய யுனெஸ்கோ
தொடர் வெளியீடு



ஒரு பிரதி விலை : 60 பக். 2 டாலர். 8 பி.

பண்பாட்டுக் கொள்கை பற்றிய ஆய்வுகளும் ஆவணங்களும்

வெவ்வேறு பொருளாதார, சமூக அமைப்புகளையும், மண்டலங்களையும், வளர்ச்சி நிலைகளையும் பிரதிபலிக்கும் நாடுகளின் பண்பாட்டுக் கொள்கைகள், சிக்கல்கள், சோதனைகள் சாதனைகள் ஆகியவற்றை ஆயும் முக்கிய பன்னாட்டுப் பரிசீலனை.

இப்போது வெளியாகியுள்ள 9 தொகுதிகள்

பண்பாட்டுக் கொள்கை : முன்னாய்வு 51 பக்.

பண்பாட்டு உரிமைகளும் மனித உரிமைகளும் 125 பக்.

அமெரிக்கப் பண்பாட்டுக் கொள்கை பற்றிய ஆய்வு
சார்ல்ஸ் சி. மார்க். 43 பக்.

ஜப்பானிய பண்பாட்டுக் கொள்கை
நோபுயா ஷிக்காமி. 55 பக்.

பிரெஞ்சு பண்பாட்டுக் கொள்கையின் சில இயல்புகள்
பிரெஞ்சு பண்பாட்டு அமைச்சு, ஆய்வுத்துறை, 56 பக்.

துனீசிய பண்பாட்டுக் கொள்கை
ரஃபிக் சையத், 56 பக்.

பிரிட்டனின் பண்பாட்டுக் கொள்கை
மைக்கில் கிரீனும் மைக்கில் வெல்டிங்கும் ரிச்சர்ட் ஹோகார்ட்டைக் கலந்து எழுதியது. 62 பக்.

ரஷ்யாவின் பண்பாட்டுக் கொள்கை
என். ஐ. கோலுப்ட்ஸோவா, இ. ஐ. ரபினோவிச் ஆகியோரின்
துணையுடன் ஏ. ஏ. ஸ்வோரிகின் எழுதியது. 68 பக்.

செக்கோஸ்லவாகியாவின் பண்பாட்டுக் கொள்கை
மிரோஸ்லாவ் மாரக், மிலான் ஹ்ரோமாட்கா, ஜோசஃப் க்ரௌஸ்ட், 77 பக்.

யுனெஸ்கோ கூரியர் - தமிழ்ப் பதிப்பு

* யுனெஸ்கோ கூரியர் (தமிழ்ப் பதிப்பு) உலகை முழுமையாக அறிய உதவும் அரிய ஏடு.
* யுனெஸ்கோவின் குறிக்கோள்களையும் சாதனைகளையும் விளக்கும் தலைசிறந்த மாத இதழ்.
* கல்வி, விஞ்ஞான, கலாச்சார வளர்ச்சியை விளக்கும் கருத்துக் கட்டுரைகள், சுவையான செய்திகள் அடங்கிய வண்ணமிகு இதழ்.
* சரளமான நடை, பக்கத்துக்குப் பக்கம் அபூர்வமான அழகான படங்கள், கவர்ச்சியான வண்ண அமைப்பு - ஆம் யுனெஸ்கோ கூரியர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து.
* பன்னிரண்டு உலக மொழிகளில் வெளிவரும் ஒரே சர்வதேச கருத்துக் களஞ்சியம்.
* எம்மொழியினரையும் எந்நாட்டவரையும் கவர்ந்து ஒன்றிணைக்கும் சிறப்பான இதழ் யுனெஸ்கோ கூரியர்.

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 தான். கல்வி நிலையங்களுக்குச் சலுகைச் சந்தா ரூ. 9-50.

தொடர்பு கொள்க :

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை
கீழ்ப்பாக்கம் : : சென்னை-10.

Photo Vittor-Ugo Contino © Asa Presse, Paris

புனித மாற்கு சதுக்கத்தில் மிளிரும் அணிகள்

இந்நிழற் படத்தில் கடற்கழியில் பிரதிபலிக்கும் வெளியின் புனித மாற்கு சதுக்க கட்டடங்களும் சின்னங்களும் புனைவுருவங்களாக இணைந்து தோன்றுகின்றன. (முன்னணி வலப்புறம் : கோமான் மாளிகையும் புனித மாற்கின் சிங்கம் அமைந்த தூணும்; இடப்புறம் : சதுக்கத்தில் உயர்ந்தெழும் மணிக்கூண்டு.) ஆங்கிலேய ஓவியரும் பொதுமை ஓவியக் கலையின் முன்னோடியுமான ஜோசப் டர்னரின் ஓவியங்களில் வடிவங்கள் தமது அமைப்பையும் திண்மையையும் இழந்து, தம்மைச் சூழ்ந்துள்ள மங்கிய ஒளி, காற்றினூடே தெளிவின்றித் தோன்றுவதுபோல், நமது இத்தாலிய நிழற்பட வல்லுநர் எடுத்த இப்படத்திலும் எழிற் காட்சியின் உண்மைத் தோற்றம் இவ்வாறு தோன்றுகிறது.